தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௨	மலர்
	பிலவ, புரட்டாசி.	
௩௭	1961 செப்டம்பர், அக்டோபர்.	௬

பாராட்டுத் திறனாய்வு

தி. நா. அறிவு ஒளி

நாம் பெற்ற இன்பத்தைப் பேற்றினை-உலகிலுள்ளயாவரும் அடைய வேண்டும் என்று எண்ணித் தொண்டு செய்து வாழ்வது கற்றுணர்ந்தடங்கிய அறிஞர் இயல்பாகும். 'தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்று அறிந்தார்'' என வள்ளுவச் சான்றோரும், 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனப் பிறிதொரு நல்லோரும் கூறிய வாய்மைகள் இவ்வுண்மையை வற்புறுத்தும்.

இந்த நல்ல நோக்கத்தினால் தோன்றியதே பாராட்டுத் திறனாய்வும். 'கற்றது உணர விரித்துரைத்தல்' எனக் குறள் கூறும் இலக்கணம் இப்பாராட்டுத் திறனாய்வின் இயல்பை விளக்குகின்றது.

பாராட்டுத் திறனாய்வு என்பதையும் 'மிகைப் புகழ்ச்சி' என்பதையும் ஒன்று கலக்கக் கூடாது. தகுதியான கலையை-இலக்கியத்தை-அதன் உண்மையை—சுவையை—நயத்தை—நன்மையை எடுத்துக் காட்டிப் பாராட்டுவதே பாராட்டுத் திறனாய்வாகும். 'மிகைப்புகழ்ச்சி' அறிவுக்கு விருந்தாகாமல்; தகுதியற்றதைக் கண்மூடிப் போற்றும் வெறிவழிபாடாகும்.

'பாராட்டுத்திறனாய்வை' நுண்ணிய கலையுணர்வினரும், விழுமிய சுவை தேர்ந்தறியும் நல்லோருமே அருள முடியும். பிறர் 'பின்னதை'ச் செய்வர்,

தமிழிலக்கியத்தில் 'பாராட்டுத்திறனாய்வு' பாக்களிலும், உரைகளிலும் காணக்கிடைக்கிறது. இப்பாராட்டுத்திறனாய்வின் வேறுவகை வளர்ச்சியே '**சாற்றுகவி**' பெறும் வழக்கமாக உருப்பெற்றது.

தமிழ் மொழியில் 'பாராட்டுத்திறனாய்வைப்' பெற்ற ஒரே நூல் திருக்குறளேயாகும். 'திருவள்ளுவமாலை' திருக்குறளினைப் பாராட்டும் நூலேயன்றோ!

'பண்டைச் சங்ககாலத்துப் புலவர் பெருமக்கள் ஆளின் மதிப்பை அளவிடாமல், அன்னார் படைப்பின் மதிப்பை அளவிட்டே இலக்கியத்தைப் போற்றினர். இதற்குச் சான்றினைப் புறநானூற்றில் காண முடிகிறது.

'அதியமான் நெடுமான் அஞ்சி, திருக்கோவலூர் மன்னனைப் போரில் வென்று மேம்பட்டான்.' இச் சீரிய செயல் அக்காலத்தமிழ்ப் புலவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. பலர் அதியமானின் வெற்றிச் சீர்மையைப் பாராட்டினராயினும்; வரலாற்றுமேதை பரணர் பாராட்டிய பாட்டே மிகச் சிறப்புடையதாக இருந்தது. அவ்வையார் ஒரு பெரும் புலவரேயாயினும், பரணர் பாட்டின் சிறப்பை மிகப் போற்றிப் பாராட்டினர்.

"....................செருவேட்டு
இமிழ்குரல் முரசின் ஏழுவரொடு முரணிச்
சென்று அமர் கடந்து நின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கு அரியை; இன்றும்
பரணன் பாடினன் மன்கொல் மற்று நீ
முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரண் அடு திகிரி ஏந்திய தோளே."
(புறநானூறு: 99. அவ்வையார்)

இத்தகு உண்மைப் பாராட்டுக்களே இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும். தக்கோரைப் போற்றி ஆர்வமூட்டுவதும்; தகவிலாரை இடித்துரைத்துத் திருத்துவதும் ஆன்ற அறிஞரின் தனியுரிமைக் கடமையாகும்.

வறுமையான நிலையிலோ, செல்வாக்கு இன்றியோ வாழும் புலவரின் படைப்பையும் நேர்மையோடு உலகம் பாராட்டவேண்டும் தக்கதாயின், இந்நிலை—நேர்மையுள்ளம்—சிலரிடம் இல்லாமலிருந்தது போலும்! 'ஏழைசொல் அம்பலம் ஏறாது' என்று உலகினர் பேச்சுவழக்கில் குறிப்பிடுவது, இத்தகு நிலையை நோக்கியே தான்.

இதனால் தான் வள்ளுவச் சான்றோரும்,

"நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்" (1046) எனக் கூறினர்.

இதற்கு உரைவகுத்த பரிமேலழகர் குறள் கருத்தை நனி விளக்கி யருளினர். "மெய்ந் நூற் பொருளைத்தெளிய அறிந்து சொன்னாராயினும், நல்கூர்ந்தார் (வறியவர்) சொல்லுஞ் சொல் பொருளின்மையத் தலைப்படும்".

ஆகவே தலைசிறந்த படைப்பாக இருப்பினும் வறியோர் படைப்பை உலகினர் பாராட்டாது கைவிடுதலை உணர்த்தி,

உலகினரின் தகாச்செயலைக் குறள் சுட்டிக் காட்டிக் கண்டிக்கிறது. இந்நிலை நேர்மையான தன்று. இத்தகு இழிவை நம் நாடு இன்னமும் கைக்கொண்டு வருகின்றமை பெரிதும் பழித்தற்குரிய தேயாம். இடைக்கால அவ்வையார்,

> " விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்
> விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனில்
> பட்டேனும் பஞ்சேனும் வேண்டும்; அவர்கவிதை
> நஞ்சேனும் வேம்பேனும் நன்று. (தனிப்பாடல் :)

என ஆளின் ஆரவாரப் புனைவைக்கண்டு, அறிவை மதிப்பிடும் இடைக்காலப் புலமை உலகின் இழுக்கியல்பை இப்பாடல் வழிஅவ்வையார் கண்டித்த நேர்மை நம் பாராட்டிற் குரியது. எப்படியோ இவ்வகையான நேர்மையற்ற போக்கு புலவர் உலகில் தலையிட்டுவிட்டது! பல மேதைகள் இதனால் சோர்வுற்று, ஆர்வம் குன்றி மொழித்தொண்டு செய்யாது தளர்ந்து விட்டனர். ஒருநூலை அரங்கேற்றம் செய்விக்கவே மிகப் பெரும் பாடுபட வேண்டிய நிலை இருந்தமை அறிகிறோம்.

இதற்குப் பொறாமையும், கெட்ட எண்ணமும் மட்டும் காரணமன்று. உண்மையான—நேர்மையான—சுவைஞர்கள் நாட்டில் குறைவாக இருந்தமையே யாகும்.

இதனை, 'மற்கொண்ட திண்புயத்தான் மாநகர் விட்டு இங்கு வந்து **சொற்கொண்ட பாவின் சுவை அறிவார் ஈங்கு இலையே**' (தனிப் பாடல்: 48) என்ற பாவால் உணரலாம். 'மன்னற்குத் தன்தேய மல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' எனவும், "எத்திசை செலினும் அத்திசைச்சோறே,' 'மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ? **உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்?**–என்னை, **வி**ரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ, குரங் கேற்றுக் கொள்ளாத கொம்பு?' எனவெல்லாம் புலவர் பெருமக்கள் செருக்கிய காலம் போய் விட்டது. கல்லாமையும், அறியாமையும் நாட்டில் மண்டியது. அறிஞர்கள் வாழ்வும் வாக்கும் வளமற்றுப்போக நேர்ந்தது. அப்போதுதான், போலிக் கவிஞர்களும், போலிப் புகழ் மொழி பொழிவோரும் நாட்டின் மிகுந்தனர். இந்த இழிநிலையை "காணாமல் வேண தெல்லாம் கத்தலாம்; கற்றோர் முன் கோணாமல் வாய்திறக்கக் கூடாதே" என்று அறிவுறுத்தி அறிவிக்கிறார். இதனால்தான் ஒட்டக் கூத்தர், வில்லி முதலியோர் நிறையறிவு பெறாத புலவர்களை இழிவு செய்து தண்டித்தனர் போலும்!

இத் தண்டனைகள் மறைந்த பிற்காலத்தில் போலிப் புலவரும், அவர் தம் பயனில் படைப்புக்களும் நாட்டில் மண்டி

யதைக் கண்ட பொற்களந்தைப் படிக்காசுத்தம்பிரான் திறனாய்வின் இன்றியமையாமை உணர்ந்தார் :

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கு இல்லை
குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி
எட்டின மட்டுஅறுப்பதற்கோ வில்லி இல்லை.
இரண்டொன்று முடிந்துதலை யிரங்கப் போட்டு
வெட்டுதற்கோ கவிஒட்டக் கூத்தன் இல்லை.
விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு ;
தேயமெங்கும் புலவர்எனத் திரியலாமே."

(தனிப்பாடல்)

இவ்வாறு தகுதியற்ற புலவர்கள் இன்றும் நாட்டில் கிடந்துழன்று வயிறுவளர்க்கும் நிலை கண்டு நெஞ்சம் கொதிக்கிறோம் !

நல்ல சுவைஞர் இல்லாத நிலை மிகவும் துயர்தருவ தொன்றே.

"கல்லடிக்கும் உளியிரண்டு காதடிக்குள்
அடிப்பதெனக்கவிதை கேட்டுப்
பல்லடிக்கக் கிடுகிடெனப் பறையடிக்கு நெஞ்சர்தமைப்
பாடுவேனோ ?"

எனப் போலியறிவினரை எள்ளிப் பாடுகின்ற புலவரின் உள்ளக் கொதிப்பு எவ்வளவு பெருகியிருக்கும்? நல்லறிவு நலஞ்சான்ற சுவைஞர் மிகுதியாக இல்லை யென்றாலும் தமிழகத்தில் அக்காலத்திலும் இருந்திருக்கின்றனர் என்பதைத் தமிழிலுள்ள பல பாராட்டுத்திறனாய்வுப் பாட்டுக்களால் உணர முடிகிறது.

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர்செயங்கொண்டான்
விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவைஉலா அந்தாதிக்கு
ஒட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் வசைபாடக்
காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலால் ஒருவர்பகரொணாதே"

என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் போன்றோர் புலவர்களின் திறமையை உள்ளது உள்ளபடி பாராட்டியிருக்கின்றனர். இதேபோல,

"வாக்கிற்(கு) அருணகிரி, வாதவூ ரர்கனிவில்
தாக்கிற்கு ஞானசம்பந்தராம்—நோக்கிற்கு
நக்கீரதேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கு அப்பர்எனச் சொல்"

என, சைவ அடியார்களுள் புலவர்களைப் போற்றிய பாடல் களும் பாராட்டுவதற்குென்றே தோன்றியது.

புலமையோடு புலவர் இயல்பையும் புலப்படுத்தும் திறனாய்வுப் பாட்டு தமிழில் காணப்படுகிறது.

“காசுக்குக் கம்பன் கருணைக்(கு) அருணகிரி
ஆசுக்குக் காளமுகில் ஆவனே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கு ஔவைஎனக் கூறு”

இத்தகைய பாக்கள் சில பொழுதில் மக்களிடம் புலவர்களைப் பற்றிய கெட்டஉணர்வையோ, கண்மூடித்தன்மை வாய்ந்த மடநம்பிக்கையையோ ஊன்றிவிடுகிறது. இந் நம்பிக்கையை மக்கள் கைவிட முடியாதவர்களாகிவிடுகின்றனர். இந் நம்பிக் கையை அடிப்படையாக வைத்தே புலவர்களின் படைப்புக் களையும் மதிப்பிடுகின்றனர். இது நேரிய தீர்ப்பாக—உண் மைத்திறனாய்வாக—உருவாவதில்லை.

இப்பாடல்களில் உண்மைப் பகுதிகளும் உண்டு என்பதை மறுக்கமுடியாது. சான்றாக அவ்வையார் (பிற் காலத்தவர்) மக்கள் கவிஞராக (People's Poet) விளங்கினர். இவ் வுண்மையையே ‘கூழுக்கு ஔவை’ என்ற தொடர் குறிக்கி றது. இவ் வுண்மையை அவ்வையாரின் பாட்டும் மெய்ப்பிக் கிறது.

“உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்றன் உளம்!”

எனக்கூறியுள்ளார். இத்தகு வல்லமையால் தானே தன் கவிதையின் வாழ்வைப் பற்றியும் தீர்ப்பு கூறுகிறார் அவர். ‘என்றும் கிழியாது என்பாட்டு’ என்று அவ்வை தன் பாடலின் நிறைவயதைக் குறிக்கும் தன்னம்பிக்கையைத் தானே தன் படைப்பைத் திறனாய்ந்து தெளியும் ஆற்றலால் உணர்ந்து உரைத்திருக்கிறார். இத்தகு ‘தன்மைப்பாட்டு’ம் புலவர்கட்கு இயல்பில் அமைவதேயாகும். ‘தன் நூலைப் படித்தால் இன்ன பயன் உண்டாகும்’ என்று புலவர்களே கூறுவது வழக்கம். மாபாரதம், இராமகாதை, நளன்காதை, ஆண்டாள் முதலி யோர் பாட்டுக்கள், சம்பந்தர் பாக்கள் ஆகியவற்றில் இத்தகு குறிப்பு காணப்படும்.

பலப்பட்டடைச் சொக்கநாதப் புலவர் பாராட்டுபாடு வதில் மிகச் சீரியவர் என்பதற்கு அவர் படிக்காசுப் புலவர் பாட்டினைச் சிறப்பிக்கும் பாவினால் உணரலாம்.

"மட்டாருந் தேன்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் பரிந்து
அவ் ஏட்டைத்
தொட்டாலும் கைம்மணக்குஞ் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டில்உறு
நளினம்தானே!" (தனிப்பா).

இவர் பாட்டில் அமைந்துள்ள புகழ்ச்சித்திறன் கற்கச் சுவைபயப்பதன்றோ! இம்முறையின் வளர்ச்சியே இலக்கியத் துறையில் 'மறவழிபாடு' அமையவும் காரணமாக இருந்தது. அது வரவேற்றற்குரிய நிலையன்று.

உண்மைத் தகுதியைப் போற்றுவது போன்று; குறையைச்சுட்டியும் காட்டவே வேண்டும். 'மறவழிபாடு'குறையையும் நிறையாக்கிவிடும்; உண்மையையும் கொன்று விடும்.

பாராட்டுங்கலைப்பாட்டில், **புதுமைத்தமிழிலக் கியத்தின் தனிப்பெரும் முதல்வரும், மறுமலர்ச்சித் தமிழ்க்கவிதை இலக்கியத்தின் தலைமைப்பாவலரும், முதற்சீர்திருத்தக் கவிஞரும், விடுதலை வேட்கையையும் உரிமைக்குரலையும் முதன் முதலில் கவிதைத் துறையில் எழுப்பிய புரட்சி கவிஞருமான வடலூர். இராமலிங்க அடிகளார்**, திருவாசக ஆசிரியர் மாணிக்க வாசகரைப் பாராட்டும் பாவினால் தெளிவாக்குகிறார்:

"வான்கலந்த மாணிக்கவாசக! நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை
கலந்துஎன்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே!"

"வள்ளுவர்நூல் அன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோர்ஆறுந்
தண்டமிழின் மேலாந் தரம்."

என்பதும் புகழ்ப்பாவாக நூல்களைப்பாரட்டுகிறது. இப்பாக்களின் அருமையும், நயமும் இவ்வளவு அவ்வளவு என எழுதிக்காட்டத்தான் இயலுமா? திருவாசகத்தைப் பாராட்டியவர்களுள் 'ஒப்பீட்டாய்வு' செய்து பாரட்டு வழங்கியவர் சிவப்பிரகாச அடிகளார் ஆவார்:

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரைஎனும் ஆரண மொழியோ;
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ,

யாதோ சிறந்தது என் குவிர் ஆயின்,
வேதம்ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துஉகக் கண்கள்
தொடுமணல் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்புஎய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.''

(நால்வர் நான்மணி மாலை)

இவ்வகை ஒப்புநோக்காராய்ச்சியே பாரட்டுத்திறனாய்வுக்கு நனிபொருந்துவதாகும். அளவுகோலால் எடைபார்த்தளந்து உண்மைத்திறன் அறிவது போன்ற நேரிய தீர்ப்பை இந்த ஆய்வு நல்கும்.

குற்றமே தேடுவோரை இலக்கியத்திறனாய்வாளர் என்னல் பொருந்தாது.

'' இலக்கணக் கவிஞர் சொல் இன்பம் தேடுவர்
மலக்குசொல் தேடுவர் வன்கணாளர் ''

என ஒரு அறிஞர் குறிப்பிட்டது போன்று கொடியோரே புன்மையைப் பெரிது படுத்துவர்.

நம் நாட்டில் 'இலக்கணங்களை' வைத்தும் 'யாப்புத் திறனாய்வு' நடத்தித் தீர்ப்பு கண்டுள்ளனர் தமிழ்ப்புலவர். பிள்ளைத்தமிழ் நூலில் 'அம்புலிப்பருவம்' பாடுவதும், உலா நூலில் 'பெதும்பை'ப் பருவத்தை விளக்குவதும், ஆசு கவிஞர்க்கு 'வண்ணப்பாக்கள்' பாடுவதும், ஏனைய புலவர் யாவர்க்கும் 'வெண்பாயாப்பு' பாடுவதும் மிகக்கடினம் என ஒருபாட்டில் வரையறை கூறப்படுகிறது:

'' காசினியில் பிள்ளைக் கவிக்கு அம்புலி புலியாம்
பேசும் உலாவில் பெதும்பை புலி—ஆசு
வலவர்க்கு வண்ணம் புலியாம்; மற்றெல்லாப்
புலவர்க்கும் வெண்பா புலி.''

இவ்வாறு பாடிய புலவர் குறிப்பிட்ட துறைகளில் பெரிதும் ஈடுபாடு உள்ளவராக இருந்திருக்க வேண்டும். அந்தத் துறையில் தனக்கோ; அன்றிப் பிறர்க்கோ நூல் யாத்திட இயலாத நிலையோ இருந்திருக்க வேண்டும். அதனால் தான் மேற்கண்ட தீர்ப்பை வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டது. இதைப்பின் பற்றியே சிலகவிஞரை 'வெண்பாப்புலி' என்றும், சிலரை' வண்ணக்களஞ்சியம் என்றும், சிலரைச் 'சந்தக் கவிஞர்' என்றும் சிலரை, 'விருத்தக் கவி மன்னர்' என்றும் பிறவாறும் கூறிப்புகழ்கின்ற நிலையும் அமைந்தது.

தமிழ் நாட்டு இலக்கிய வரலாற்றில் வழங்கும் சில கற்பனைக் கதைகள் நம் நாட்டு புலவர்களின் திறனாய்வு ஆர்வத்தைக் காட்டுகின்றன.

அதி வீரராம பாண்டியரின் துணைவியார்; தம் கணவர் இயற்றிய 'நைடதம்' காவியம் 'ஓடி யிளைத்த நாய்போல் காவியம் சென்று தேய்ந்திருதல்' என்ற குற்றம் கொண்டிருக்கிறது. என்று திறனாய்ந்து உரைத்தாராம். தம் வாழ்க்கைத் துணைவர் எழுதியதாயினும், நாட்டு மன்னர் பாடியதாயினும் 'குற்றங் குற்றமே!' என்று உண்மைத்திறனாய்வு செய்த பாண்டிய அரசியாரின் திறனாய்வு ஆர்வமும், உண்மை போற்றும் உயர் உள்ளமும் தெள்ளத் தெளிவாகிறதன்றோ!

இறையனாரின் 'கொங்கு தேர்வாழ்க்கை' பாட்டில் 'மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம்' இல்லை என நக்கீரர் கூறி அப்பாட்டு பொருட்குற்றம் உடையதென உறுதியாக உரைத்த கதையும் திறனாய்வின் ஒண்மையை வற்புறுத்துகிறது.

இதே போலப், பல பட்டைச் சொக்கநாதப் புலவரின் 'வண்டுவிடு தூது' என்ற நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட போது; ஆண்டு வீற்றிருந்த சொல்லாட்சி வளமிக்க கவிஞர் சுப்ரதீபக் கவிராயர் 'சண்பக மலரில் வண்டு படியாது' எனக் கூறி அந்நூலில் குறையைத் திறனாய்ந்துரைத்தார்.

காளமேகப்புலவர் ஒருபோது 'இரட்டையர்' ஒருபாட்டை முடிக்கவியலாது ஒருகுறிப்பிட்ட சொல்லாட்சி 'யைப் பெய்ய வியலாது தவிக்கும் போது; ஆண்டிருந்த காளமேகக் கவிஞர், "மண்தின்ற பாணம்' என்ற சொற்றொடரைக் கூறி அப் பாட்டை இரட்டையர் முடிக்க உதவினர். காளமேகம் இறந்துபட்டபோது, சுடுகாட்டுக்கு வந்திருந்த இரட்டையர்,

"ஆசுகவியாய் அகில உலகுளங்கும்
வீசுபுகழ்க் காளமேகமே—பூசுரா!
விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ஐயையோ!
மண்தின்ற பாணம்என்ற வாய்"

எனப் பாடிப் பாராட்டித்தம் உள்ளத்துயரை வெளிப்படுத்தியமையும் பாராட்டுள் சீரிய பாராட்டாகுமன்றோ!

தொல்காப்பியத்தேவர் இயற்றிய 'திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகத்தையும் இரட்டையர்கள்' "தொல்காப்பியத் தேவர் சொன்ன தமிழ்ப்பாடல் அன்றி. நல்காத்திருச் செவிக்கு நாம் உரைப்பது ஏறுமோ?" எனப் பாராட்டினர். இது போன்று உரையாசிரியர்களையும் அவர்கள் உரைகூறும் திறன்கண்டு பாராட்டும் நிலை தமிழகத்தியற்கையாம்.

நக்கீரரின் களவியலுரை கேட்டுக் காரணிகனை உருத்திர சன்மன் கண்ணீர் வார்ந்து மெய்ம் மயிர் சிலிர்த்துச் சுவைத்த செய்தி இந்நுட்பம் உணர்த்துவதாகும். 'நூல் எல்லாம் வள்ளுவர் செய்நூலாமோ?' என்று பாராட்டப் பெற்ற குறளுக்கு உரைகண்டாரில் பரிமேலழகர் உரையே பாவலரால் நனிபாராட்டப் பெறுவது. (இன்று அதன் குறையை அறிஞர் கூறுகின்றனர். அவை கொள்ளற்குரியதே. ஆயினும் பரிமேலழகரின் சில உரைத்திறத்தின் வளம் உணர்ந்து வியக்கத்தக்கதேயாம். அவர் வடமொழிக் காதலால் நேர்மை வழுவி உரைத்த சில பகுதிகளும், தமிழக மரபுக்கும், முறைக்கும் மாறுபட்டுரைத்த சில உரைகளும், வலிந்து பொருள் கொண்டபகுதிகளும் ஏற்றற் குரியன அல்ல.) அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், கல்லாடர், தெய்வச்சிலையார் முதலியோர் பற்றியும் பலபடபாராட்டுக்கள் வழங்குவதும் பாராட்டுத் திறனாய்வின் பாற்படும். சிற்சில விடங்கள் ஓரளவு மிகைப் புகழ்ச்சி இடம் பெற்றிருப்பது இயல்பே யெனினும், அவ்வுரையாசிரியர்கள் தம் கைம்மாறு கருதாத அருந்தமிழ்த் தொண்டின் பெருமை நோக்கிடின்; இனைய புகழ்மொழிகள் அவர்கட்குத் தக்கதே என்பதை நன்குணரலாம்.

பாராட்டுத்திறனாய்வு இலக்கிய—மொழி ஆர்வத்தை வளர்க்கும் அருமருந்தாகும். பாராட்டுத்திறனாய்வு தகுதியுள்ள கலை-இலக்கியத்துக்கும், தக்க அறிஞர்க்கும் அமைவது சால்புடைய பணியாகும். தமிழில் பண்டுதொட்டு இம்முறைத் திறனாய்வு விளங்கியது. உண்மைத்திறனை உணர்ந்தபின்பே தமிழ்ப்புலவர் பாராட்டினர். உண்மைத்திறனற்ற நூல்களைத் தாக்கிப் புறக்கணிக்கவும் தமிழறிஞர் பின்வாங்கவில்லை என்ற உண்மைகளை இதுகாறும் ஆய்ந்துணர்ந்தோம்.

இந்த பழந்தமிழ்ப் புலவர் இயல்பை நுணுகியுணர்ந்து புதுமைத் தமிழிலக்கியத் துறைக்கும் 'பாராட்டு முறைத் திறனாய்வைப்' பயன்படுத்தி மொழிவளம் பேண வேண்டியது இக்காலத் தமிழருக்குக் கடனாகும்.

மக்கள் இலக்கிய அறிவும், இலக்கிய ஆர்வமும், சுவையுணர்ச்சியும் மிக்கோராக விளங்கினாலன்றி உண்மைத் திறனாய்வு செழிக்க முடியாது. ஆகவே இளையோர் முதல் முதியோர் வரை இலக்கியச்சுவை—புலமைச் சுவை—துய்க்க வேண்டுமெனின் அவர்கட்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்ட வேண்டும். அவ் ஆர்வம்வளரப் 'பாராட்டுத்திறனாய்வு' தமிழில் மிக வேண்டும்.

ஒன்று--அது மிக நன்று

சாலை இளந்திரையன், எம். ஏ., எம். லிட்.,

வரலாறு ஒரு விந்தையான திரைச்சீலை. பலரின் பலப்பல செயல்கள் அதில் பதிவதில்லை; சிலரின் ஒரு செயலே அதில் நீங்காது நிலைத்து விடுகிறது.

ஒரே ஒரு செயலால் வரலாற்றில் சிறப்புப் பெற்ற பலர் உண்டு. காரணம், அவர்களின் அந்த ஒரு செயல் சிறந்த தாகவும், பலரும் நீடு நினைந்து மகிழவோ உருகவோ தக்க தாகவும் அமைந்து விடுகிறது.

இலக்கியத்தில் தங்களின் ஒரே பாடலால் சிறப்புப் பெற்றவர்கள் பலர் உண்டு. நூற்றுக்கணக்காக, ஆயிரக் கணக்காகப் பாடிய புலவர்களுக்கெல்லாம் கூடக் கிடையாத சிறந்த இடம் இந்த ஒருபாடல்கவிஞர்களுக்குக் கிடைத்து விடுகிறது. ஒரே ஒரு பாடலால் "அணிலாடு முன்றிலார்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றுத் திகழ்கிறார், ஒருவர். ஒரே ஒரு சிறந்த உவமையே இலக்கிய உலகில் இவர்க்கு இறவாமை அளித்துவிட்டது. இவ்வாறே "கங்குல் வெள்ளம்" என்னும் தொடரில் ஒருவர் வாழ்கின்றார்; கல்பொரு சிறுநுரை போல என்னும் உவமை, மெல்ல மெல்ல இல்லாகாமல், மேலும் மேலும் வளர்ந்தோங்கும் புகழை ஒருவருக்கு வழங்கியுள்ளது. இவர்கள் போலவே, "கவைமகனார்", "குப்பைக்கோழியார்", "செம்புலப் பெயல்நீரார்", "நெடுவெண்ணிலவினார்", "பதடி வைகலார்", "மீனெறி தூண்டிலார்", "விட்டகுதிரையார்" போன்ற பலர் ஒவ்வொரு பாடல் பாடியே நீங்கா நெடும்புகழ் பெற்றுள்ளார்கள்.

இவர்களின் வழிவந்த மற்றொரு பெருமகனார், **கிடங்கிற் குலபதி நக்கண்ணனார்** என்பவர். இவர் பாடிய ஒரே பாடல் குறுந்தொகையில் (252–ஆம் பாடலாக) உள்ளது. நமது முன்னோரும், நாமும், நமது வழிவழிப் பின்னோரும் நினைந்து பாராட்டும் சிறப்புடையதாக இப்பாடல் அமைந்துள்ளது.

நமது நக்கண்ணனார் கிடங்கில் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். பலரைப் பேணி வளர்த்த பெருமையும் இவருக்கு உண்டு என்பதை இவரது சிறப்புப் பெயர் காட்டுகிறது. அக்காலத்தில். ஆயிரம் மாணவர்களை ஆதரித்துக் கல்வி கற்பித்துச் சிறப்படையும் பெரும் பேராசிரியர்களுக்குக் "குலபதி" என்னும் பட்டம் வழங்கப் பெற்றது. இவர் மாணவர்க்கு ஆசிரியர் என்பதை இவர் பெற்ற பட்டம் விளக்குகிறது;– மாநிலத்துக்கெல்லாம் இவர் ஆசிரியர் என்பதை இவரது பாடல் விளக்குகிறது.

நக்கண்ணனாரின் அந்தப் பாடல் இதுதான் :

" 'நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை, இன்முகம் திரியாது
கடவுட் கற்பின் அவன்எதிர் பேணி,
மடவை மன்ற நீ' எனக் கடவுபு
துனியல்—வாழி, தோழி. சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங்கு ஒல்பவோ, காணுங் காலே?"

இப்பாடல் நமக்குக் காட்டும் காட்சிகள் மூன்று. முதலாவது, தலைவன் பிரிந்துவிட, வருந்தி மெலிந்து வளையல் சிந்த இருந்து தலைவி வருந்தும் நிலை; இரண்டாவது, பிரிந்து சென்ற தலைவன் விரும்பி வந்த போது, "நலங்கேழ் முறுவல் நகை முகம் காட்டி"த் தலைவி அவனை வரவேற்கும் நிலை; மூன்றாவது, இந்த நிலைகளைப் பற்றித் தோழியும் தலைவியும் உரையாடும் காட்சி. முதற்காட்சி வேதனை காட்டுகிறது; இரண்டாவது காட்சி அந்த வேதனைக்கு ஒரு சோதனை காட்டுகிறது; மூன்றாவது காட்சி அந்தச் சோதனையில் பெரு வெற்றி பெற்ற உள்ளப் பாங்கைக் காட்டுகின்றது.

சங்க இலக்கியம் முழுவதுமே, பெண்ணின் உயர்ந்த கனிவு உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. பெண்ணின் வெகுளி, விற்பிடித்து "நீர்கிழிய எய்த வடுப் போல" மாறுவதைப் பல இடங்களிலும் பார்க்கிறோம். பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரும் போது, "அவனுக்கு அது தக்கது, எமக்கு இது கடமை" என்று ஏற்றுக்கொள்ளும் மனைவியர் உண்டு; தம் குழந்தை மூலமாகவோ விருந்தினர் மூலமாகவோ ஊடல் தீர்ந்து ஏற்றுக் கொள்ளும் மனைவியர் உண்டு; வள்ளுவத் தலைவி போல,

"புலப்பல் எனச்சென்றேன்; புல்லினேன், நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு"

என, ஆற்றாமை காரணமாக ஊடல் துறந்து ஏற்றுக்கொள்ளும் மனைவியர் உண்டு. இன்னும் இப்படி எத்தனையோ? வரையறையற்ற நிகழ்ச்சி வேறுபாடுகளைக் கொண்ட இன்பியல் காவியம்தானே இல்வாழ்க்கை?

நக்கண்ணனார் காட்டும் மனைவி மிகமிக வளர்ந்த பண்புள்ளவளாகக் காணப்படுகின்றாள். இவளும் ஆற்றாமையோடு துன்புற்றவள்தான்; கணவன் பிரிவால் கைவளை நெகிழ மெலிந்து வாடியவள்தான். ஆயினும் தன் கணவனைக் கண்ட போது, அவள் உள்ளம் பழைய பிரிவையும் வேதனையையும் மறந்து விடுகிறது; கூடவே, பிறர் நெஞ்சத்தை அளந்து பார்த்து அதற்கேற்ப நடக்கும் பண்பிலும் ஓங்குகிறது.

தன் இன்பத்துக்காக வேற்றிடம் சென்று விட்டு, வந்து நிற்கும் கணவனைக் கடிந்துகொள்ளும் உரிமை மனைவிக்கு உண்டு. "என்னை என் தந்தை வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு உன் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் போ." என்று வேதனைக் குரலில் கடிந்து கொள்ளும் மனைவியை இலக்கியத்தில் பார்க்கிறோம். "நீ அன்பில்லாதவன், உன்னோடு ஊடுவதில் பயனில்லை" என்று குமுறும் மனைவியரும் பலர் உண்டு. இடித்துரைக்கவும் கடிந்து கொள்ளவும் உரிமை பெற்ற இந்த மனைவியோ, அந்தச் சந்திப்புக்கு முன்னர் எதுவும் நடவாதது போல, இனிய முகத்தோடு கணவன் எதிர்சென்று அவனைத் தழுவிக் கொள்ளுகிறாள். மேலோட்டமாகப் பார்க்கையில், இச்செயல், மனைவியின் வலிமையின்மையைக் காட்டுவது போலத் தெரிகிறது. அல்லது, ஆற்றாமை காரணமாக அப்படிச் செய்து விட்டாளோ? என்றும் எண்ணத் தூண்டுகிறது. ஆனால், பின்னர்த் தன் தோழியிடம் இவள் பேசுவதைக் கேட்கும்போது தான் அது ஏமாளித்தனமல்ல, உயர்ந்த பண்பு என்பது புலனாகிறது.

"உனக்கு அறிவுத் தெளிவே இல்லை. உன்னை நோவச் செய்து இன்புற்றிருந்த அவனை என்ன பாடு வேண்டுமானாலும் படுத்தியிருக்கலாம், நீ மடக்கிக் கேட்டால் அவன் பதில் கூற முடியுமா? நீயோ ஆசையோடு வரவேற்று அவன் நடத்தைக்கு ஊக்கமூட்டி விட்டாய். இனிமேல் உன்னைப் பிரிந்து செல்வது அவனுக்கு மிக எளிதாகிவிடும். எங்கெங்கே போய் விட்டு வந்தாலும் நம் மனைவி ஏனென்று கேட்க மாட்டாள் என்ற துணிவு அவனுக்கு ஏற்பட்டு விடும்"...என்று பலவாறு குற்றஞ் சாட்டுகிறாள் தோழி.

தலைவி அமைதியாகப் பதில் கூறுகிறாள்: "தோழி, கணவன் மனைவி என்றாகி விட்டபின், கணவன் பிரிந்து மனைவிக்குத் துன்பம் ஏற்படுத்தி விட்டால் அவனை இரண்டு கேள்வியாவது" கேளாமல் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்னும் பொது நியதியை நினைத்து நீ பேசுகிறாய். பொது நியதியை எடுத்துக் கூறி என் கடமையை நினைவூட்டும் உன் செயலில் தவறில்லை. ஆனால் நீ ஒன்றை மறந்து விட்டாய். அவரோடு நமக்கு உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நீண்ட காதல் வாழ்வில் நிறைந்த அன்பு பொழிந்தவர் அவர்; நம் வாழ்வுக்கு வளமும் அரணுமாக அமைந்த பெருமை உடையவர் அவர். உயர்ந்த சான்றாண்மை உடையவர். உலகத்தையும் வாழ்க்கையையும் பற்றி அவரிடம் பாடம் கேட்டு வளர்ந்தவர்கள் நாம். அவர் ஏதோ ஒரு தவறு செய்து விட்டார் என்பதற்காக அவரையே சாடும் உரிமை நமக்கு வந்து விடுமா?

"அதுமட்டுமா?...சான்றோர் இயல்பை நீ அறியவில்லை. பொதுவாக இகழ்ச்சி யாருக்கும் துன்பம் தரும்; புகழ்ச்சியோ மகிழ்ச்சி தரும். சான்றோர்களோ, பிறர் தங்களைப் புகழ்வதைக் கேட்கவே நாணுவர். அப்படிப்பட்ட மெல்லிய நல்லிதயம் படைத்தவர்களைப் பழித்துரைத்தால் அவர் நிலை என்னகும்? ...தம் புகழைக் கேட்டு நாணும் இயல்புடைய சான்றோர், தம் பழியைக் கேளாமலே நாணி ஒடுங்குவர். அவரை மேலும் தாக்கி வெந்த புண்ணில் வேலை நுழைக்கும் தீச்செயலை மனைவி செய்யலாகுமா?"

சாதாரணமாக, ஆணுரிமை-பெண்ணுரிமைகளுக்குப் படை திரட்டுவோர் கண்ணேட்டத்தில் பார்த்தால், "கணவன் தவறு செய்தாலும் மனைவி பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்னும் பழைய செய்தியே இதில் சொல்லப்பட்டிருப்பதாகத் தோன்றும். ஆனல் குடும்ப வாழ்க்கை, இந்தக் கடமை—உரிமை எல்லைக் கோடுகளுக்கு அப்பாற்பட்டது. அதை விளக்கும் இலக்கியமும் அப்படிப்பட்டதே.

இலக்கியம் என்பது, அதில் கூறப்படும் கணவன் மனைவியருக்காக அமைந்ததல்ல. அதில் வரும் பாத்திரங்கள் வரலாற்று மனிதர்களாகவே இருந்தாலும், அவர்களைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியம் அவர்களுக்காக அமைவதல்ல. அவர்களைப் பற்றிப் படிக்கும் மக்களின் இதயத்தை வளர்ப்பதே இலக்கியத்தின் முக்கியமான நோக்கம். குறையுடைய ஒருவனை இலக்கியத்தில் கண்டு சீறும் நம் மனம், நம்மிடத்தில் அந்தக் குறை ஏற்படாதவாறு பார்க்க வேண்டும்; வேதனைப் படும் ஒருவனை அல்லது ஒருத்தியை இலக்கியத்திற் கண்டு அவர்களுக்காக நாம் விடும் கண்ணீர், அதே வேதனையைப் பிறருக்கு நாம் கொடுக்காதபடி நம்மைத் திருத்த வேண்டும்.

இந்த நோக்கோடு பாடலைப் பார்ப்போம்: தங்களின் பழைய உறவை எண்ணியதனுல் தன்னுடைய குற்றமொன்றையும் மனைவி பாராட்டவில்லை என்பதை, இதைப் படிக்கும் கணவன் உணர்கிறுன். அது போலவே, கணவனின் ஒரு குற்றம் தங்கள் நீண்ட சுவை வாழ்வில் சலசலப்பை ஏற்படுத்துமாறு மனங்கோணுதலாகாது என்பதை, இதைப் படிக்கும் மனைவி உணர்கிறுள். எனவே தவறு ஏற்படாதவாறு வாழ வேண்டும் என்னும் பொறுப்பு அவன் மேல் நயமாகச் சுமத்தப்படுகிறது. அவனை அறியாமல் தவறு செய்து விட்டாலும், அதற்காக அவனே வருந்துகிறுன்;—அக் குற்றத்தைப் பாராட்டாத நம் பொறுமையாலேயே அதைக் கணவன் உணர்ந்து கொள்ளுகிறுன் என்னும் தெளிவை அவள் பெறுகிறுள்.

"ஏற்பது இகழ்ச்சி" "ஐயம் இட்டு உண்" என்னும் இரட்டை நீதிமுறையே இதில் வற்புறுத்தப்படுகிறது. தாமாக உணர்ந்தாலன்றி யாரும் திருந்தவோ வளரவோ முடியாது. பிறரின் அதட்டலும் அறிவுரையும் ஒருவரையும் திருத்திவிட முடியாது. ஆனல் அன்பினலும் பண்பினலும் பிறர் உள்ளத்தில் மலர்ச்சியையும் எழுச்சியையும் உண்டாக்க முடியும். அந்த மலர்ச்சியும் எழுச்சியும் அவர்களை அவர்களே உணரத் துணைசெய்யும். இந்தப் பேருண்மையையே இப்பாடல் காட்டுகிறது.

இப்பாடலில் பெயரில்லாமல் வரும் பெண்தான் சிலப்பதிகாரத்தில் "கண்ணகி" என்னும் பெயருடன் விளங்குகின்ருள். ஊரும் பேரும் இல்லாமல் நிற்கும் இந்த உயர்ந்த பெண்ணுக்கு உருவம் கொடுக்கவே சிலப்பதிகாரம் எழுந்ததோ என்று எண்ணும்படி அமைந்துள்ளது இப்பாடலின் பண்பு. பிரிவுத் தீச்சுட வெம்பியிருந்த கண்ணகி, திரும்பி வந்த தன் கணவனைக் கண்டதும் "நலங்கேழ் முறுவல் நகைமுகம்" காட்டுவதைப் பார்க்கிறேம். இப்பாடலில் வரும் மனைவியும், "இன்முகம் திரியாது கடவுட் கற்பின் அவன் எதிர்" செல்கின்ருள்.

அறிவுத்திறனில்லாக் கற்புடைய பெண்ணுக்கு எட்டாத செயல் இது. எந்தப் பெண்ணும் தன் துன்பத்தை வெளிக்காட்டிக் கொள்ளவும், திட்டித் திருத்தவுமே முன் வருவாள். இது பெண்ணியல்பு மாத்திரமல்ல; மனிதப் பொது இயல்பே இதுதான். இந்த அறிவுமுறை, விரும்பிய பயனைத் தருவதில்லை என்பதை உணர்ந்த இலக்கிய நெஞ்சம், பொன்றுந் துணையும் புகழ்தரும் பொறுமை வழியாகிய அன்புமுறையைப் படைத்துக் காட்டுகின்றது. இவ்வழியில் நிற்பதற்குப் பொதுவான பெண்மையும் கற்பும் போதா. அதனலேயே இப்பெருஞ் செயல் பெண்ணைக் "கடவுட் கற்பினள்" என்று குறிப்பிடுகின்ருர் ஆசிரியர். இத்தகு பெண்களே "தெய்வக் கற்பினள்", "கற்புடைத் தெய்வம்" என்றெல்லாம் பாராட்டப் பெறுவர்.

கண்ணகியின் அன்புப் பொறுமை, பலகாலம் ஒரே குற்றத்தைச் செய்த கோவலனையே திருத்தி விடுகிறது. பல காலம் அவன் உள்ளத்தை ஆட்கொண்டிருந்த மாதவி, உலகில் பிறர் போல ஒருத்தியாகவே அவனுக்குத் தோன்றுமளவுக்கு அவனை மாற்றி விடுகிறது, கண்ணகியின் "நலங்கேழ் முறுவல் நகைமுகம்"! அன்பின் வழிப் பொறுமை மிக்க வலிமை உடையது, நிலையான மாறுதலைப் பிறர்பால் ஏற்படுத்தக் கூடியது என்பதற்குக் கோவலன் கண்ணகி வாழ்வே இலக்கியம்.

ஒதிசி (THE ODYSSEY)

சுருக்கம் : எழுதியது, **விரிஞ்சை, மு. பழநி, எம். ஏ.**

புலவர்பெருமான் ஓமரின் இரண்டாவது காப்பியமாகிய ஒதிசி நாடுதிரும்பும் பொழுது ஒதிசியசு புரிந்த பல வீரச் செயல்களையும், வியப்புச் சுவையையும் இடையருது தந்து இருபத்து நான்கு பகுதிகளைக் கொண்டு, தவழ்ந்து செல்கிறது.

ஒதிசியசு (Odysseus) பெருவீரனும் சான்ருேனுமாவான்; இலாரடெசு (Laertes) என்பானின் மகன்; இதாகா (Ithaca) நாட்டு மன்னன்; எலனை மணக்க விரும்பியவருள் இவனும் ஒருவன்; எலனை மணக்க முடியாததனல் கற்புக்கரசியாகிய பேனிலோப்பை (Penelope) மணந்தவன்; எலன் திராய் நகருக்குப் பாரிசால் தூக்கிச் செல்லப்பட்ட பொழுது பிற கிரேக்க இளவரசரோடு சேர்ந்து அவளை மீட்க, மெனில்சிற்குத் துணை செய்தவன்; மாபெரும் மரக்குதிரை செய்து அதன் உதவியால் திராயை அழித்துவிட்டு எலனை மீட்கமுடியும் என்று சூழ்ச்சி சொன்னவன்; திராய் நகரம் வீழ்வதற்குத் துணையாயிருந்த இவனே இக் காப்பியத்தின் தலைமகனுவான்.

ஒதிசியசு மகனுகிய தெலிமெகசும் (Telemachus) மனைவி பேனிலோப்பும் பத்தாண்டுக் காலம் ஒதிசியசு நாடுதிரும்புவான் என்று எதிர்பார்த்துப் பார்த்து மனச் சோர்வுற்றனர். திராய் நகரம் வீழ்ந்து பத்தாண்டுகள் முடிந்து இன்னும் வராததனல் ஒதிசியசு திரும்புங்கால் மாண்டுபோயிருப்பான் என்று இதாகா நாட்டில் யாவரும் நினைத்தனர். அண்டையிலிருந்த அரச குமாரரும் பிறரும் அரண்மனையில் குடி புகுந்தனர். எப்படியாகிலும் பேனிலோப்பை மணந்துவிட்டால் நாடும் கிடைக்கும், அரசியும் கிடைப்பாள் என்று எண்ணி அங்கேயே பகலெல்லாம் பொழுதுபோக்கினர். அரசச் செல்வத்தையெல்லாம் ஆடலும் பாடலும் செய்து பாழாக்கினர்;

இப்பெரும் பேருண்மையை நிலைநாட்டிய சிறப்பினுலேயே நக்கண்ணனரின் பாடல் தனக்கென ஒரு தனி இடம் வகுத்துக் கொண்டு வாழ்கிறது. நக்கண்ணனர் ஆயிரக்கணக்கான மாணவர்களை வளர்த்து விட்டிருக்கிருர். அதற்குத் துணையாக இருந்தது அவரது சிறந்த அறிவு ஒன்றே. அவருடைய கவிதை நெஞ்சம் பலரை நல்வாழ்வுக்கு உரியவராக வளர்க்கிறது. அதற்குத் துணையாக இருப்பது இந்த அழியாப் பாடல் ஒன்றே. ஆம்; நக்கண்ணனர் நமக்கு வழங்கிய பாடல் ஒன்றே ஒன்று; அது மிகமிக நன்று.

பேய்த் தண்ணீருக்கு வாரி இறைத்தனர். அவள் யாரையாவது விரும்பி மணக்கும் வரையில் அங்கேயே இருக்கவேண்டும் என்று எண்ணினர். இதற்குத் தடையாயிருந்த தெலிமெகசையும் ஒதிசியசின் சிறந்த நண்பரையும் பணியாட்களையும் அழித்துவிடவேண்டும் என்று முடிவு செய்தனர். எனவே, மெனிலசையும் நெசுடரையும் கண்டு தன் தந்தையின் நிலைமையை அறிந்துவரத் தெலிமெகசு கப்பலிற் புறப்பட்டான். இதாகாவில் இந்தச்சூழ்நிலை நிலவிய பொழுது ஒதிசியசு ஒரு தீவின் கண் காலிப்சோ (Calypso) என்னும் தேவதையுடன் காலங்கழித்து வந்தான்.

காலிப்சோ ஒதிசியசை மிகவும் காதலித்தாள். சிறிது பிரிந்திருந்தாலும் அவள் கண்களில் நீர் நிறைந்துவிடும்; வாடிவிடுவாள்; முகம் பொலிவிழந்து விடும். தீவிலேயே தங்கிவிட்டானுனல் அவனுக்குச் சாகாத நிலையை அளித்து விடுவதாகக்கூட வாக்களித்தாள். ஆனல் அவனே கடற்கரையில் நாள்முழுமையும் உட்கார்ந்து கொண்டு தன் மனைவியையும் மகனையும் நினைத்து வருந்திக் கொண்டேயிருந்தான் எட்டாண்டுகள் எவ்விதமாகவோ கழித்துவிட்டான். எப்போதும் வாடிய முகத்தோடேயே காணப்பட்டான். எல்லாக் கடவுளரும் இரக்கப்பட்டு எர்ம்சு (Hermes) என்னும் தேவனைத் தூதாக அனுப்பி விடுவிக்கவேண்டும் என்றனர்; ஒதிசியசு இதாகா திரும்பவேண்டும் என்றும் புதிய இடத்தில் அவன் சாகக்கூடாது என்றும் எர்ம்சிடம். சொல்லியனுப்பினர். எர்ம்சு சொல்லியதை காலிப்சோ ஒப்புக் கொண்டு ஒதிசியசை இதாகாவிற்கனுப்ப வேண்டிய ஏற்பாடு செய்தாள். ஐந்தாறு நாட்களில் ஒதிசியசும் ஒரு படகினைக் கட்டி முடித்தான். பல நாட்களுக்காகும் உணவுப் பொருட்களைக் கொடுத்துப் பிரிய மனமில்லாமலேயே விடையளித்தாள். மகிழ்ச்சியோடு அவனும் புறப்பட்டான். காலிப்சோடு நன்ருக வாழ்ந்திருக்கலாம், ஆனல் தன்மனைவி பேனிலோப்போடு இதாகாவில் வாழ்ந்துதான் இறக்கவேண்டும் என்னும் ஒரு உறுதியை மேற்கொண்டான்.

அவன் நாடு திரும்புவதைக் கண்ட போசிடான் (Poseidon) மீண்டும் கோபங்கொண்டு பேய் அலைகளைக் கடலில் உண்டாக்கினன். கடல் கொந்தளித்தது. ஒதிசியசு அலைப்புண்டான். கடைசியில் பாசியன் (Phaeacians) கடற்கரையில் அலைகளால் ஒதுக்கப்பட்டு மூச்சு பேச்சில்லாமல் பிணம்போல் வீழ்ந்து கிடந்தான். நினைவு ஏற்பட்ட பிறகு ஆடையற்றிருந்தனல் சட்டென்று சிறிது தொலைவு சென்று ஆண்டிருந்த ஒரு புதரில் ஒளிந்து தழைகளால் தன்னை மூடிக்கொண்டான். பாசியர் தலைவன் அல்சினசிற்கு (Aclinous) ஒருமகள் இருந்தாள்; பெயர் நாசிகா. எதீன (Nausicaa) என்னும் தேவதை

அவள் கனவில் வந்து அவளுடைய தந்தை அண்ணன் முதலியோருடைய ஆடைகளைத்துவைத்து வரவேண்டும் என்று சொல்லிச் சென்றாள்.

மறுநாள்காலை துணிகள், பழவகைகள், உணவுவகைகள் மதுவகைகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு தன் பாங்கியரோடு நாசிகா தேர்மேலேறிப் புறப்பட்டாள். துணிகளை எல்லாம் துவைத்துக் கடலில் புனல் விளையாட்டயர்ந்தனர். உண்டபிறகு பந்து விளையாட ஆரம்பித்தனர். பெண்களின் ஆரவாரத்தால் ஒதிசியசு கண்விழித்துப் புதரிலிருந்து வெளிப்போந்தான். அவனைப்பார்த்தவுடன் நாணத்தினால் பேரோசை செய்து கொண்டு ஓடினர். ஆனால் நாசிகா மட்டும் அங்கேயே நின்றாள். தன்னை ஊருக்குள் அழைத்துச் செல்லுங்கள் என்று வேண்டலாமா என்று நினைத்தான். அவளிடம் நடந்தவற்றைச் சொல்லி முறையிட்டான். அவன் நிலையைக் கண்டு மனமிரங்கினாள். ஆடைகளை அவனுக்குக் கொடுத்துதவி ஊருக்குள் அழைத்துச் சென்றாள். தன் தந்தை அல்சினசிற்கு அறிமுகப்படுத்தினாள். அன்புடன் வரவேற்று விருந்தோம்பி அவனுடைய கதையைச் சொல்லுமாறு வேண்டினான். திராய் நகரம் சூறையாடிக் கைப்பற்றிய பிறகு தன் வீரரோடு புறப்பட்ட முறையினையும், தனக்கடுத்தடுத்து ஏற்பட்ட துன்பங்களையும் விரிவாகச் சொல்லலானான் :—

என் பெயர் ஒதிசியசு; இலாரடெசு அரசன்தான் என்னுடைய தந்தையாவார். என்னுடைய வீரச் செயல்களினாலும் அறிவின் திறத்தாலும் யாவரும் என்னைப் போற்றினர். திசையெலாம் இசை பரவியது. விண்ணுலகமும் வியந்தது. தலைமைக்கடவுளாகிய சுயூசும் பிறகடவுளரும் எனக்கு வழியில் பல இடர்களை ஏற்படுத்திப் படாதபாடு படுத்தினர். அவருள்ளும் போசிடான் எனும் கடற்றேவன் தான் எனக்கு மிகவும் துன்பத்தைச் செய்தவன். திராய் நகரம் வீழ்ந்த பிறகு நானும் என் வீரரும் நாடுதிரும்பக் கப்பலிற் புறப்பட்டோம். ஒரு பெருங்காற்று எங்களைத் திரேசு (Thrace) கடற்கரையோரமாகக் கொண்டு சேர்த்தது. இசுமாரசு (Ismarus) நகரத்தில் நாங்கள் இறங்கி அதனைச் சூறையாடினோம். தீயும் வைத்தோம். பக்கத்திலிருந்தவரெல்லாரும் சேர்ந்து எங்களைத் தாக்க வந்தனர். அவர்களிடமிருந்து தப்பிக் கப்பலிற் புறப்பட்டோம். பிறகு கடலில் ஒரு குமுறல் ஏற்பட்டது. வீரத்திரை கொண்டு கடல் விண்ணை இடித்தது. திக்குகள் சிதறிவிடுமோ என்று அஞ்சினோம். எங்களுக்கு வழி தெரியவில்லை. பத்து நாட்களுக்கு எங்களுக்கே எந்தக்கடலில் இருக்கிறோம் என்று தெரியவில்லை.

கடைசியில் தாமரை உண்போர் தீவிற்குச் சென்று தங்கினேம், அவர்கள் தாமரைகளைத்தின்று வாழும் இயல்புடையோர். கரையைச் சேர்ந்தவுடன் தண்ணீரும் உணவும் கண்டு கொண்டு வரச் சிலரைத் தீவிற்குள் அனுப்பினேன். தீவிலுள்ளோர் மிகவும் நல்லவர்கள். தாமரைப் பழங்களை என் வீரருக்குக் கொடுத்தனர். அவைகளைச் சாப்பிட்டால் மறுபடியும் அந்தத் தீவினை விட்டுப் புறப்பட மனமே இராதாம். இன்பக்கனவுகளைக் கண்டு கொண்டு உலகத்தையே மறந்து விடுவராம் சென்றவர் மீளாததைக்கண்டு புறப்பட்டுச் சென்று நடந்ததை அறிந்தேன். அவர்தம் கை கால்களைக்கட்டிக் கப்பலில் ஏற்றிக்கொண்டு மிக வேகமாகப் புறப்பட்டேன். எஞ்சியவரும் சென்று விடுவரோ என்று எனக்கு அச்சம். சின்னாட்களுக்குப் பிறகு ஒரு தீவிற்குச் சென்று தங்கினேம்.

பேருருவம் உடைய சைக்குளோப்புகள் (Cyclops) எனும்
அரக்க ர் அங்கு வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நெற்றியில்
மட்டும் ஒரே ஒரு கண்தான் இருந்தது, பார்ப்பதற்கு அச்சமா
யிருந்தது . மந்தை மந்தையாய் ஆடுகளை வைத்துக் கொண்டு
அவைகளை த் தின்றும் பாலைக் குடங்குடமாகக் குடித்தும்
மலைகளில் இருந்த குகைகளில் வாழ்ந்து வந்தனர். தீவிற்குச்
செல்வதற்கு முன் சைக்குளோப்புகளைப் பற்றி எங்களுக்குத்
தெரியவே தெரியாது. மறுநாள் காலை தீவினைச் சுற்றிப்
பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டோம். கடற்கரைப்
க்கமாயிருந்த ஒரு குகையைப் போய்ச் சேர்ந்தோம். உள்ளே
சென்று பார்த்த ால் குடங்குடமாகப் பால், பாலாடைகள்
ங்காங்குக் காண ப்பட்டன. ஆட்டுக்குட்டிகள் விளையாடிக்
காண்டிருந்தன. அமைதியும் இன்பமும் குகையில்
வழ்ந்தன. வயிரார நாங்கள் தின்று பசியாறினேம். யார்
ந்தக் குகைக்குரியவ ர் என்று அறிய ஆவலாய் இருந்தோம்.
லையானதும் ஒரு பெரி ப அரக்கன் சைச்குளோப்பு (Cyclops)
ரிய அடிமரத்தைக் கை யில் எடுத்துக்கொண்டு தன் ஆட்டு
ைதயையும் ஓட்டிக் கொ ண்டு குகைக்கு வந்து சேர்ந்தான்.
ள்ளே வந்தவுடன் ஒரு பெர ிய பாருங்கல்லை எடுத்து வழியை
விட்டான். இரவு உண விற்காகப் பாலைக் கறந்தான்.
னிடமிருந்து எப்படித் தப்ப முடியும் என்று எல்லோரும்
சி நடுங்கினேம். மூலையில் க ிடந்து ஒடுங்கினேம். அவனு
ய பாலாடைகளை உண்டதினை ் அவனுக்குச் சீற்றம் மிகும்
றுவேறு நாங்கள் அஞ்சினேம். தீடீரென்று தன் ஒற்றைக்
ணினால் எங்களைக் கண்டுவிட்ட ான். நீங்கள் யார் என்று
களைக் கேட்டான், நாங்கள் கிரே க்கர் என்றும் திராய்
ர வென்று மீளும்போது கடலில் வ ி தப்பினவர் என்றும்

நான் சிறிது துணிந்து சொன்னேன். "தலைமைக் கடவுள் சுயூசின் பேரால் வேண்டிக்கொள்கிறேன். எங்களுக்கு நீ அருள் செய்ய வேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன்.

நாங்கள் சுயூசை மதிப்பதில்லை என்றும் அவனைவிட நாங்கள் மேம்பட்டவரும் ஆற்றல் மிக்கவருமாவோம் என்றும் பெருமுழக்கம் செய்தான். என்ன நினைத்தானோ ஏது நினைத்தானோ எங்களில் இருவரைத் திடீரென்று பிடித்துக் காலைக் கிழித்து நெருப்பிலே வாட்டித் தின்றான். பிறகு பல குடங்களிலுள்ள பாலைக் குடித்துக் கீழேசாய்ந்து உறங்கினான். எஞ்சியிருந்த நாங்கள் பத்துப்பேரும் இவன் வயிற்றுக்குள் அடங்கிவிடுவோம் என்று எண்ணி அஞ்சினோம். தூங்கும் பொழுது அவனைக் கொன்றுவிட்டால் பிறகு பாறையைப் புரட்டி வெளியேற முடியாதாகவே ஒன்றும் புரியாமல் விழித்தோம். காலையில் எழுந்து மற்றும் இருவரைப் பிடித்து இழுத்து வாட்டி வதக்கிச் சிற்றுண்டியாக்கிக் கொண்டான். பிறகு மந்தைகளை வெளியே ஓட்டிக் கொண்டு செல்லும்போது வழியை மறுபடியும் மூடிவிட்டுச் சென்றான். உள்ளேயே அகப்பட்டுக் கொண்டோம். ஆனால் நான் ஊக்கத்தைக் கைவிடவில்லை. அவன் கொண்டுவந்த அந்த அடிமரத்தை ஆறடியாக வெட்டி முனையைக் கூர்மையாகச் செய்து நெருப்பிற்காட்டி அவன் நன்றாகத் தூங்கும்போது ஒற்றைக் கண்ணில் பாய்ச்சிச் செருகிச் சுழற்றவேண்டும் என்று நான் ஒரு சூழ்ச்சி சொன்னேன். என் வீரர் யாவரும் ஒப்புக் கொண்டனர். மாலையானதும் மலை வந்து சேர்ந்தது. திறந்து கொண்டு உள்ளே வந்ததும் மறுபடியும் வழியை மூடிவிட்டான். மற்றும் இருவரைப் பிடித்துக் கிழித்து உண்டான். அந்தப் பயங்கரக்காட்சியை எங்களால் பார்க்க முடியவில்லை. உள்ளம் தடுமாறினோம். நான் திட்டப்படியே நடக்கத் துணிந்தேன். மதுவில் சிறிதும் நீர் கலக்காது நடுங்கிக் கொண்டே அவன் கையில் கொடுத்தேன். பலமுறை என்னிடம் வாங்கிக் குடித்தான். மிகுதியாகக் குடிக்கவே மயக்கமும் களிப்பும் ஏற்பட்டன. உன்னுடைய பெயர் என்ன என்று கேட்டான் "யாருமில்லை" என்று நடுங்கிக் கொண்டே சொன்னேன். "அமிழ்தம் போன்ற மதுவைக் கொடுத்ததனால் உனக்கு ஓர் உதவி செய்யப்போகிறேன். அஃதாவது எல்லோரையும் உண்ட பிறகு கடைசியில் உன்னை உண்கிறேன். இதுதான் நான் உனக்குச் செய்யபோகும் உதவி" என்று முழக்கம் செய்தான். குகை அதிர்ந்தது. மயக்கத்தினால் கீழே வீழ்ந்து உறங்கினான். திட்டப்படியே நெருப்பிலே இட்டுக் காய்ச்சிய நீண்ட மரத்தை நானும் இன்னும் நால்வரும் சேர்ந்து ஒற்றைக் கண்ணில் வைத்துத் திருகினோம்.

வலி பொறுக்கமாட்டாமல் அலறி ஆரவாரம் செய்தான். நிலை குலைந்து குதித்தான். மற்றைய பக்கத்திலிருந்த சைக்குளோப்புகள் உதவி செய்யக் குகையைச் சூழ்ந்து யார் உனக்குத் துன்பம் செய்தது என்று கேட்டனர். எனக்குத்துன்பம் செய்தவன் "யாருமில்லை, யாருமில்லை" என்று கத்தினன். "யாரும் உன்னைத்துன்பம் செய்யாமலிருக்கும் பொழுது எங்களை ஏன் தூக்கத்திலிருந்து எழுப்பினுய்" என்று சீறித் தத்தம் குகைகளுக்குச் சென்றுவிட்டனர். அவன் கைக்கு எட்டாமல் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒடுங்கி அன்றிராப் பொழுதைக் கழித்தோம். என்னுடைய சிறிய சூழ்ச்சியை நினைத்து நானே சிரித்துக் கொண்டேன். மறுநாள் காலையில் சைக்குளோப்பு எழுந்து பாறையை எடுத்துவிட்டு உள்ளேயிருக்கும் நாங்கள் வெளியே செல்லும்போது பிடித்துவிடலாம் என்று எண்ணி இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு வழியில் உட்கார்ந்து கொண்டான். ஆனால் நாங்கள் மற்ருெரு சூழ்ச்சியைச் செய்தோம். மும்மூன்று ஆடுகளை இணைத்துக் கட்டி அவைகளின் அடி வயிறுகளைப் பிடித்துக் கொண்டு ஒவ்வொருவராக வெளியேறினேம். ஆடுகள் எங்களைத் தாங்கிக் கொண்டு செல்கின்றன என்று அறியாது ஆடுகளைமட்டும் மேலே தடவிக் கொடுத்து வெளியே யனுப்பினன். நாங்கள் எல்லோரும் தப்பிக் கப்பலில் ஏறிக் கடலிற் சிறிது தொலைவு சென்ற பிறகு "குருடனக்கியது யார் என்று யாராவது உன்னைக் கேட்டால் இதாகா நாட்டுமன்னன் ஒதிசியசு என்று சொல்" என்று கப்பலிலிருந்து அவன்காதில் விழும்படி உரக்கக் கத்தினேன். அவன் ஒதிசியசு எப்படியும் அவன் நாட்டிற்குப் போகாமல் அலைய வேண்டும் என்று தன் தந்தையும் கடற்றேவனுமான போசிடானை வேண்டிக் கொண்டான். அவன் வாரி வீசிய பாறைகள் நல்லகாலமாக எங்கள் மேற்படவில்லை.

மீண்டும் எங்கள் கடற்செலவு தொடங்கியது. தன்மகன் சைக்குளோப்பு செய்த வேண்டுகோளினல் எனக்குத் துன்பமிழைப்பதற்கு இன்னும் போசிடான் மறந்தானிலன். பிறகு சர்சி (Circe) என்னும் மந்திரக்காரி வாழ்ந்து வந்த ஒரு தீவிற்குச் சென்று சேர்தோம். ஒருமலையின் மீது ஏறி அங்கே பக்கத்தில் இருந்த ஒரு காட்டில் புகை வந்து கொண்டிருந்ததைக் கொண்டு அங்கு வீடு இருக்க வேண்டும் என்று உறுதி செய்து பலவீரரோடு என் நண்பன் உரிலோகசை (Eurylochus) அனுப்பினேன். "சிங்கங்களும் ஓநாய்களும்" சுற்றி விளையாடிக் கொண்டிருந்த அந்த வீட்டை அடைந்தோம். அவைகள் எங்களைத் துன்புறுத்தவில்லை. உள்ளேயிருந்து இனிய பாட்டு வந்துக் கொண்டிருந்தது. வெள்ளாடை உடுத்திக் காண்பாரைக்

கவரும் அழகுடைய ஓர் இளமங்கை அன்னம்போல் வீட்டிற்கு வெளியேவந்தாள். நடக்கப் போவதை அறிவதற்காக நான் மறைந்துகொண்டேன். நம் வீரர்களை உள்ளே அழைத்துக் கொண்டு சென்று கள்ளினைக் கொடுத்து மந்திரக்கோலால் அவர்களைத் தொட்டுப் பன்றிகளாக்கிக் குடிசையிலடைத்து விட்டாள்" இவைகளை உனக்கு அறிவிக்கவே ஓடோடி வந்தேன் என்று உரிலோகசு என்னிடம் சொன்னான். உரிலோகசு மறுபடியும் வர அச்சப்படவே நான் மட்டும் வாளோடு சென்றேன். எர்ம்சு எனும் தேவன் கொடுத்த பூவின் உதவியால் சர்சியை அடிபணிய வைத்தேன். "இதாகா நாட்டு மன்னன் ஒதிசியசு உன்னை வந்து காண்பான் என்று முன்னமேயே எனக்கு எர்ம்சு சொன்னான், இருவரும் நண்ப ராய் இருப்போம்" என்றாள் சர்சி. என்னுடைய வேண்டு கோளால் நண்பர்யாவரும் பழைய உருவமெய்தினர். அவளு டைய வேண்டுகோளின்படியே யாவரும் ஓராண்டு அந்தத் தீவிலேயே தங்கினோம். மறுபடியும் புறப்பட நாங்கள் முடிவு செய்தோம். ஆனால் சர்சிக்கு எங்களைப்போம்படி சொல்ல மனமில்லை. வழியில் இன்னும் ஏற்படக்கூடிய துன்பங்களை யும் அவைகளின்று தப்புகின்ற வழிகளையும் எனக்குமட்டும் சொன்னாள். அவைகளை நன்றாக மனத்தில் அமைத்துக் கொண்டேன்.

மீண்டும் எங்கள் கடற்செலவு தொடங்கிற்று. ஒரு தீவின் பக்கத்தில் செல்லும்போது நெஞ்சையள்ளும் இனிய பாடல் களைக் கேட்டோம். நாங்கள் மயங்கினோம். சர்சி சொல்லிய துன்பம் விளைக்கும் அழகிய பெண்கள்—சைரன்கள் (Sirens) அவர்கள்தாம் என்று அறிந்து கொண்டேன். இசையினால் ஆட வரைக்கவர்வராம். சென்றவர் இதுகாறும் மீண்டதில்லையாம். பாட்டுக் கேட்காத வண்ணம் தேன் மெழுகினைக் காதுகளில் அடைத்துக் கொள்ள் என் நண்பர்களுக்குச் சொன்னேன். ஆனால் அப்பாட்டினைக்கேட்க எனக்குமட்டும் ஆசை. ஆனால் நான் அங்கே போய்விடாதவாறு கப்பற் கம்பத்தில் என்னைக் கட்டிவிடச் சொன்னேன். தீவினைத் தாண்டும் வரை என்னை அவிழ்த்துவிடக் கூடாது என்றும் ஆணையிட்டேன். கப்பல் நெருங்கிச்சென்றது. பாட்டைக்கேட்டவுடன் எனக்கு அவர்கள் மேல் தணியாத காதல் ஏற்பட்டது. விடுவித்துக்கொள்ள முயன்றேன். ஆனால் என் நண்பர்கள் இன்னும் இறுக்கமாக என்னைக்கட்டி மிக வேகமாகக் கப்பலை ஓட்டினார்கள்.

அவ்வாறு சென்றுகொண்டிருந்தபொழுது இரண்டு பெரும் பாறைகளுக்கு இடையில் கப்பல் செல்கின்ற நிலை ஏற்பட்டது. சர்சி எச்சரித்தபடியே இடப் பக்கத்திலிருந்த "சாரிபுதிசு" என்ற பாறையின் கீழ் மிகவும் அச்சமூட்டும் நீர்ச்சுழற்சியைக்

கண்டேன். கப்பல் சென்றிருந்தால் சுழற்சியில் அகப்பட்டுத் தூள் தூளாய்ப் போயிருக்கும். வலப்பக்கத்தில் இருக்கும் பெரும் பாறையின் கீழ் ஒரு சிறுகுகை இருந்தது. அதில் ஒரு வன்மைமிகுந்த ஒரு தீயவிலங்கு இருந்தது. சில்லா என்று அதற்குப் பெயர். அதற்கு ஆறுதலைகள் உண்டு. மூன்று அடுக்குப்பற்களும் பன்னிரண்டு நாக்குகளும் ஒவ்வொரு வாயிலும் உண்டு. பேருருவம் உடைய அவ்விலங்கை இப் பொழுது நினைத்தாலும் எனக்குப் பயமாயிருக்கிறது, அரசே! கப்பலையே அழித்து விடும் நீர்ச் சுழற்சியுடைய பாறைப் பக்கத்தில் போவதைவிடச் சில்லா வாழும் பாறைப் பக்கத்தில் செல்லலாம் என்று முடிவு செய்தேன். எங்களில் ஆறுபேரை ஒரு நொடியில் கவர்ந்து அவ்விலங்கு தின்று விட்டது. எப்படியோ கடைசியில் இடையில் புகுந்து அப்பால் வந்து சேர்ந்தோம். அஞ்சியதனால் நாங்கள் மிகவும் சோர்ந்து எங்கேயாவது தங்கலாம் என்று முடிவு செய்தோம். அதற்கேற்ப ஒரு தீவும் தென்பட்டது. ஆடு மாடுகளின் ஆரவாரம் எங்களுக்குக்கேட்டது. அது ஞாயிறு தேவனின் தீவு "என்பதை அறிந்து கொண்டேன். தீவிலிருக்கும் ஆடுகளையோ மாடுகளையோ யர்ராவது கொன்றால் உடனே யாவரும் இறந்துவிடுவர் என்று சர்சி எனக்குச் சொல்லியதை வீரருக்குச் சொல்லி விழிப்பாக இருக்கச் செய்தேன். ஒரு மாதம் கடலில் கொந்தளிப்பு, ஆகவே எங்களால் புறப்பட முடியவில்லை கையிலிருந்த உணவுப் பொருள்கள் தீர்ந்தன. பசிப்பிணி எங்களைத் தீண்டியது. நான் இல்லாத சமயம் என் வீரர்கள் ஆடுமாடுகளை வெட்டி வாட்டி உண்ணத்தொடங்கினர். வந்து கண்ட நான் மிகவும் நடுங்கினேன். சில நாட்களுக்குப்பிறகு எங்கள் கப்பல் புறப்பட்டது. என் வீரர்கள் செய்த செயல்களுக்குத் தக்க தண்டனை பெற்றோம். ஞாயிறு தேவன் கோபம் கொண்டானோ என்னவோ பெரும் சூறாவளி தொடங்கிற்று. கடல் அலைபாய்ந்தது. எங்கள் கப்பல் இருக்குமிடம் தெரியாமற் போய்விட்டது. என் நண்பர் என்னையினரோ அறியேன். எல்லோரும் அழிந்துவிட்டிருப்பர். ஒருசிறு மரத்துண்டின் உதவியால் மிகவும் பாடுபட்டுக் காலிப்சோ வாழ்ந்து வந்த தீவிற்குப் போய்ச்சேர்ந்தேன். ஏழாண்டுகள் அவளிடம் வாழ்ந்து வந்த பிறகு தெய்வங்களின் அருளினால் மீண்டும் புறப்பட்டு உங்களை வந்து சந்தித்தேன். இதுதான் என் 'துன்பம் நிறைந்த வாழ்க்கைவரலாறு' என்று முடித்தான்.

ஒதிசியசின் வாழ்க்கை வரலாற்றைக்கேட்ட அரசன் அல்சினசு மிகவும் இரங்கினான். எப்படியாகிலும் விருந்தினனை அவன் ஊருக்கு விரைவில் அனுப்பிவிட வேண்டும் என்று உறுதி கொண்டு விரைந்து செல்லும் ஒரு கப்பலைச் செய்து

கொடுத்தான். வேண்டிய உணவுப் பொருள்களையும் கொடுத்தான். இதாகா நோக்கிக் கப்பலும் புறப்பட்டது. பல நாட்களுக்குப் பிறகு கரையை வந்தடைந்தான் சோர்வு மிகுதியால் கரையின் மேலேயே படுத்துறங்கினான்.

"அரண்மனையில் பல அரச குமாரர்கள் உன்மனைவி பேனிலோப்பை மணக்க முற்றுகை செய்திருக்கின்றனர். இவ்வுடையில் நீ சென்றாயானால் உயிர்க்கிறுதி ஏற்பட்டாலும் ஏற்படும். ஆகவே இரவலன் வேடத்தில் செல்லவேண்டும்,, உயூமசு எனும் பன்றிமேய்ப்பான் வீட்டுக்குச் சென்று தங்கியிரு. உன்னைத் தேடி மெனிலசிடம் சென்ற உன்மகன் தெலிமெகசிற்குச் சொல்லி இங்கு அனுப்புகிறேன் என்று எதினா தேவதை ஒதிசியசிற்குச் சொல்லி மறைந்தாள். பன்றி மேய்ப்பன் வந்த இரவலன் யாரென்று தெரியாவிட்டாலும் அன்புடன் ஒதிசியசை வரவேற்று விருந்தோம்பினான். ஒதிசியசு இறந்துவிட்டான் என்று இளவரசர் எல்லாரும் முடிவு செய்து பேனிலோப்பை மணக்க முற்றுகை செய்திருக்கின்றனர் என்றும் அவன் மகன் தந்தையைத் தேடப் புறப்பட்டுபோய் இன்னும் திரும்பவில்லை என்றும், பேனிலோப்பு தன் கணவன் திரும்பி விடுவான் எனும் உறுதியோடு இருக்கிறாள் என்றும் ஒருபெரிய துணியைப் பின்னி முடிக்கும் வரையில் யாரையும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று காலத்தைக் கடத்த ஒரு விரதம் எடுத்துக்கொண்டிருக்கிறாள் என்றும் கூறினான். தன் கற்புடைத் தெய்வம் பேனிலோப்பும் அருமைமகன் தெலிமெகசும் படும் பாட்டைக் கேட்டுக் கண்ணீர் விட்டான் ஒதிசியசு. இதாகாவில் ஏற்பட்ட சூழ் நிலைகளைச் சொல்லி உடனே புறப்படும்படி எதினா தெலிமெகசிற்குச் சொன்னாள். உடனே மெனிலசிடத்திலும் எலனிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு எதீனா சொல்லியபடியே பன்றிமேய்ப்பான் வீட்டிற்குச் சென்றான். தான் வந்திருப்பதை அன்னைக்குத் தெரிவித்துவிட வேண்டும் என்று பன்றி மேய்ப்பானை அரண்மனைக்கு அனுப்பி விட்டான். தான் தந்தை என்று தெலிமெகசிற்கு ஒதிசியசு சொன்னான். தெலிமெகசு மகிழ்ச்சியால் அழுதேவிட்டான். கண்ணிழந்தான் பெற்று விட்டதுபோல் ஆடிப்பாடினான். தந்தையும் மகனும் கடவுளருளால் ஒன்று சேர்ந்தனர். சூழ்ச்சியால் இளவரசர்களை வெல்ல வேண்டும் என்று இருவரும் திட்டமிட்டனர். அரண்மனைக்குச் சென்று எப்படியாகிலும் அவர்களின் படைக்கலங்களை அங்கிருந்து நீக்கிவிடவேண்டும். நான் இரவலன் வேடத்தில் வருவேன் என்று தன் மகனுக்குச் சொன்னான். விரைந்து ஓடினான் தெலிமெகசு. இரவலன் வேடம்பூண்ட ஒதிசியசும் உயூமசும் அரண்மனைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

வழியில் ஆர்கோசு (Argos) என்னும் ஒரு கிழநாய் தன் தலைவனாகிய ஒதிசியசைக் கண்டுக்கொண்டு வாலை ஆட்டியது; மகிழ்ச்சியால் உயிரையும் நீத்தது. பக்கத்தில் வருகின்ற பன்றி மேய்ப்பானுக்கும் ஒதிசியசை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பல ஆண்டுகள் பழகிய பேனிலோப்பிற்கும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. எஞ்சிய இறைச்சித் துண்டுகளையும் எலும்புகளையும் இளவரசர்கள் இரவலனாகிய ஒதிசியசிற்கு வீசி எறிந்தார்கள். கொடிய உள்ளமுடைய ஆண்டினசு (Antinous) ஒரு நாற்காலியைத் தூக்கி அதனால் ஒதிசியசை ஓங்கியடித்தான். இவனை எப்படியும் கொல்ல வேண்டும் என்று வஞ்சினம் கொண்டான் ஒதிசியசு, தான் யார் என்று பேனிலோப்பிற்குச் சொல்லவில்லை. தன் கணவனைக் கண்டதாகக் கூறிய இரவலனுடைய காலைக் கழுவுமாறு முதிர்ந்த செவிலியாகிய உரிசீலியாவிற்குக் (Eurycleia) கட்டளையிட்டாள். கழுவும் போழ்து காலில் வடு இருப்பதைக்கண்டு ஒதிசியசுதான் இரவலனாக வந்திருக்கிறான் என்று கண்டு கொண்டாள் உரிசீலியா. தான்யார் என்று யார்க்கும் சொல்ல வேண்டாமென்று வேண்டிக் கொண்டான்.

இளவரசர்கள் பகலெல்லாம் அரண்மனையிலிருப்பர். இரவில் தம்தம் வீடுதிரும்புவது வழக்கம். பின்னிய துணியை அவர்கள் சென்றவுடன் பிரித்துவிடுவது; மறுபடியும் காலையில் போடத் துவங்குவது என்று அவர்களை ஏமாற்றிக் கொண்டு நாட்களைக் கடத்தி கொண்டுவந்தாள். முனையில் துளையையுடைய பன்னிரண்டு இரும்புக்கம்பங்கள் நிறுத்தப்பெறும். வில்லினை வளைத்து நாணேற்றி அம்பு தொடுத்துத் துளைகளின் வழியாக எய்து வெற்றி பெறுபவன் எவனோ அவனைத் திருமணம் செய்து கொள்வேன் என்று சபதம் செய்தாள் பேனிலோப்பு.

எல்லாரும் முயன்று தோல்வியுற்றனர். இரவலன் சென்று தொட்டதும் எல்லாரும் ஏளனமாகச் சிரித்தனர். ஆனால் இரவலன் வில்லினை மாலை எடுப்பதுபோல் எடுத்து வளைத்து நாணேற்றி அம்பு எய்து வெற்றி பெற்றான். பிறகு ஆண்டினசைப்பார்த்து ஓர் அம்பு எய்தான். தொண்டையை ஊடுருவி உயிரைக் குடித்துச் சென்றது. இருதிறத்தார்க்கும் போர் மூண்டு இறந்தவர் போக எஞ்சியவர் தோற்றுத் தப்பியோடினர்; வீரம் விளைத்து வெற்றி பெற்றவன் தன்கணவன் ஒதிசியசுதான் என்று பேனிலோப்பு நம்பவில்லை. கல் நெஞ்சமுடையவள், கண்ணிருந்தும் குருடியாவாள் என்று தன் தாயைப் பழித்தான் தெலிமெகசு. எனக்கும் ஒதிசியசிற்குமே தெரியக்கூடிய மறைபொருள்கள் உண்டு அவைகளை இவ்விரவலன் சொல்லிவிட்டானானால் நம்புவேன் என்றாள். நெஞ்சு

சென்ற இதழின் தொடர்ச்சி :

அறிவன் கோயில்

வித்துவான் சி. கோவிந்தராசனர்,

தமிழ் விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

(உரிமை ஆசிரியருக்கு)

சமணரின் புதிய காலம் :

இருக்கு வேளிரின் ஆதரவில் குன்றுகளிலும் குகைகளிலும் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட சமணருடைய வாழ்க்கை நாட்கள், சேற்றுப் பாதையில் சகடத்தை ஏற்று நடக்கும் எருதுகள் போல, மெதுவாக வழிக்கொண்டன. காலப் பாதையும் ஆண்டுகளாக அகன்று வந்தது. மலைகளில் தேர்ந் தெடுக்கப்பட்ட பாறைப் பகுதிகளில் சமணச் சிற்பிகளின் உளியோசைகள் ஒலித்தன. குடைதளிகள் உருவாக, அவற் றில் சமண தீர்த்தங்கரர்களின் சிலைகளும் அமைந்தன. சமண வோவியரின் கைவண்மை குகைக் கோயில் முழுவதையும் அழகுபடுத்தியது. இவ்வாறு, தம்மளவில் வாழ்க்கைக்கு இயற்கைக் குகைகளும், வழிபாட்டிற்குக் குடைதளிகளும் சமணர் அமைத்துக் கொண்டபோது தான், சிற்றண்ணல் வாயில் மலையிலும் குகைக் கோயில் உருவாகியது. சிற்பக் கலைஞரின் கைத்திறனோடு ஓவியரின் ஒப்பற்ற திறனும் அதில்

டைந்தான் ஒதிசியசு. ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கின. உலகம் சுழன்றது. கற்புக்கரசியாகிய என்மனைவியிடமே இச் சொல் கேட்க நேரிட்டதே என்று நினைத்து நினைத்து உருகி னன். கயவன் எவனுவது நான்தான் ஒதிசியசு என்று சொல்லிவிட்டால் என் செய்வது என்று எண்ணியே இவ்வாறு சொன்னள் பேனிலோப்பு. இரவு வந்ததும் சோதனை செய்ய முனைந்தாள். திருமணத்தின்போது ஒதிசியசு ஒரு படுக்கைக் கட்டில் செய்தான் அதனை எடுத்துவந்து இவ்விரவலனிற்கு வெளியேபோடு என்று செவிலிக்கு ஆணையிட்டாள் பேனி லோப்பு. மரத்தை (உயிருள்ள மரம்) யல்லவா கட்டிற் கம்ப மாக அமைத்துக் கட்டிலைச் செய்து முடித்தேன். எவ்வாறு மரத்திலிருந்து கட்டிலைப்பிரித்து வெளியே கொண்டுவர முடியும் என்றுன் ஒதிசியசு. மரத்தை வெட்டாது யாரும் கட்டிலைப்பிரிக்க முடியாதே என்றுன். அப்பொழுதுதான் கற்புக்கரசி பேனிலோப் பிறகு ஐயம் நீங்கிற்று. பிறகு இரு வரும் மகிழ்ந்து இணைந்து தான் வந்த வரலாற்றை விரிவாக மனைவிக்குச் சொல்லிச் சொல்லி இன்புற்றுன் ஒதிசியசு.

ஒன்றுகூடி விளங்கின. இக்காலம் ஏறத்தாழ கி. பி. 640—க்கு மேல் என்று கொள்ளலாகும்.

இவ்வாறு பெட்டிப் பாம்பென சமணர் மலையிலும் குகையிலும் அடங்கிக் கிடந்தபோது, பாண்டியநாடு கி. பி. 765—க்கு மேல் நெடுஞ்சடையன் பாரந்தகன் ஆட்சியில் இருந்தது. இப்பாண்டியன் வைணவத்தை உயிரெனக் கொண்டவன். இவன் சோழ நாட்டையும் தன்னாட்சிக் குட்படுத்தி இருந்தான். எனவே, இவன் காலத்தில் சமணம் தலையெடுக்கவில்லை. இப்பாண்டியனுக்குப் பிறகு, கி. பி. 792—க்குமேல் அரசுரிமை கொண்ட முதலாம் வரகுணமகாராசனே சைவ சமயத்தைத் தலைமேற்கொண்டவனாக விளங்கினான். எனவே, இவனுடைய ஆட்சிக்காலமாகிய கி. பி. 835 வரையிலும் சமணம் ஒடுக்கப்படவில்லை என்ற அளவில் நிற்றதே தவிர எத்தகைய ஆதரவும் பெறவில்லை. இந்நிலையில், கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், தமிழகத்தில் ஆங்காங்கு சிறுசிறு பொறியாக அணையாது நின்ற சமணத்திற்கு ஆதரவு காற்று வீசத் தொடங்கியது.

பழையாறையில் பல்லவராட்சியின் கீழ் அடங்கி இருந்த சோழன் விசயாலயன், காலம்பார்த்துத் தஞ்சையைத்தாக்கிக் கைப்பற்றினான். திறமையுடன் முன்னேற்றமடைந்த இம்மன்னன் சோழப் பேரரசைப் பல்லவர் பிடியினின்றும் முழுவதும் விடுவித்துத் தனியரசாக்கினான். இம் மன்னவன் சைவ நலச் செல்வனாயினும், பிற சமயங்களை வெறுக்காது ஆதரிக்கும் அருந்தன்மை உடையவனாக இருந்தான். இவன் தனது ஆட்சியில் புதுக்கோட்டை சீமையில் உள்ள நாரத்த மலையின் பகுதியான மேலமலைக் குன்றின் மீது, பல்லவர்களுடைய கற்றளி அமைப்பில் விசயாலய சோளீச்சரம் என்னும் சிவன் கோயிலைத் தம்பெயரால் எழுப்பினான். அக்கோயிலைச் சார்ந்தே பழமையான சமணர் குகைக் கோயிலும் விளங்கி நின்றதோடு சமணருக்குரியதான பாழிகளும் இம் மன்னனால் ஆதரவு பெற்றன. எனவே, சமயப் பொது நோக்குடன் ஆண்ட விசயாலயனது. ஆட்சியில், சமணர் வளர்ச்சி பெறத் தொடங்கினர்.

இவ்வாறாகச் சோழ அரசியலில் சமயங்கள் ஆதரவுபெற்ற பொழுது, பாண்டிய நாட்டைச் சீமாறன் சீவல்லவன் என்னும் பாண்டியன் ஆண்டு வந்தான். இம் மன்னவன் கலையார்வம் நிறைந்தவன். உண்மையொழுக்கத்தை மேற்கொண்டொழுகிய சான்றோரைப் பேணுபவன். எனவே, பாண்டிய நாட்டின் எல்லைப் பகுதியிலுள்ள சிற்றண்ணல் வாயில் மலையில்

வாழ்ந்து வந்த சமணக் கலைஞருக்கும் துறவிகட்கும் பேராதரவு கிடைத்தது. பாண்டியனும் சிற்றண்ணல் வாயில் மலைக்குத் தம் பரிவாரங்கள் சூழ தேவியோடு எழுந்தருளினன். கலைக் கோயிலாகத் திகழ்ந்த குகைக் கோயிலைக் கண்ணுற்றான். சிறப்புடன் சமணரால் ஆக்கப்பட்ட சிற்பவோவியங்கள் சீரழிந்து கொண்டிருந்த நிலைக்கு இரக்கமுற்றான். இக்காலக் காற்றைக் கருத்துடன் பயன்படுத்தினர் மதுரை ஆசிரியர் இளங்கௌதமன் என்ற சமணத் துறவி. மன்னவன் ஆதரவை வேண்டினர்.

சமணருடைய கலைவன்மையிலும் புலமையிலும் கருத்தூன்றிய சீமாற பாண்டியனுடைய ஆணையின்படி, மதுரை ஆசிரியர் கண்காணிப்பில், சிற்றண்ணல் வாயில் குடைதளியின் முகமண்டபமும் சிற்ப ஓவியங்களும் சீர்திருத்தப் பெற்றன. இவற்றிற்குக் காப்பாகப் புதிய அமைப்பில் முன் மண்டபமொன்றும் எடுக்கப்பட்டது. சீமாறன் சீவல்லபனுடைய குறிப்பினைச் சார்ந்து குகைக் கோயிலின் தென்புற முகப்புப் பாறையில், இந் நிகழ்ச்சியைக் குறிக்கும் கல்வெட்டொன்றும் எழுந்தது. கல்வெட்டில் "பார்முழு தாண்ட பஞ்சவர் குல முதல், ஆர்கெழு வைவேல் அவனிப சேகரன், சீர்கெழு செங்கோல் சீவல்லபன்" என்று சிறப்பிக்கப் பட்டான் பாண்டியன்.

இவ்வாறு, சமணர்கட்குச் சோழராலும் பாண்டியராலும் ஆதரவு பெருவதாயிற்று. சிற்றண்ணல் வாயிலிலுள்ள அவர்கள் குகையும் 'சித்தர் குகை' என்ற சிறப்புப் பெயரைப் பெறுவதாயிற்று.

இவ்வாறு, தமிழகத்தில் வாழ்ந்த சமணருடைய வரலாற்றினை ஒருவாறு அறிந்த நிலையில், சிற்றண்ணல் வாயில் மலையிலுள்ள மற்றைய சின்னங்களைப் பற்றியறிதல் சிறப்புடையது என்னும் குறிப்புடன் மேற்செல்லுதும்.

காவல் பள்ளி :

சிற்றண்ணல் வாயில் மலையின் மேற்பகுதியில் அமைந்துள்ள சமணர் குகைக்குச் செல்லும் ஏழடிச் சட்டத்தினின்றும் வெளியேறிய பின்னர், தொடர்ந்து மலையின்மேல் வடக்கு நோக்கிப் போவோமானல், இடையே இப் பகுதியைக் காணலாம். மலையின்சிகரமாக இப்பகுதி அமைந்துள்ளது. இங்கு நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்போல், இரண்டு பெரிய பாறைகள் எதிர் முகமாக இணைந்து நிற்கின்றன. இடைவெளி வளைந்த சிறு சந்தாக அமைந்திருக்கிறது. சந்தினுள் ஒருபுறம் சிறிய கல்லிருக்கை யொன்றும்



காவல் பள்ளி

வெட்டப்பட்டுள்ளது. இவ்விருக்கையிலிருந்து தொலைக்காட்சிகளை நன்கு காணுதற்கியலும். இச்சூழல்களைக் கண்டு சிந்திப்பின், எவரும் எளிதில் அறியவியலாத இப்பகுதி, இங்கு வாழ்க்கை மேற்கொண்ட சமணர்கட்கு மிகவும் இன்றியமையாததாக இருந்திருக்கிறதென்பது புலனாகும்.

காவல் பணியேற்ற சமணத் தொண்டர், காலம் தவிராது இப்பகுதியில் இருந்து தொலைக் காட்சியாக எதையும் நோக்கி அறிந்துவந்திருக்கிறார்கள். இதைப் போலவே மலையின் மேற்புறத்திலுள்ள கரடிக் குகையிலும் காவல் செய்யப் பெற்றிருந்ததனை முன்னர் கூறினோம். சமணர் எங்கு உறைவிடம் கொள்ளுகின்றனரோ அப் பகுதியைப் பள்ளி என்றழைத்தல் இயல்பு. எனவே, அவர்களால் காவல் செய்யப்பட்ட இவ்விடத்தைக் 'காவல் பள்ளி' என்றே அழைத்தனர்.

காவல் பள்ளியை அடுத்து மேற்புறமாக உள்ள தளத்தில் ஐம்பதின்மர் அமர்ந்திருந்தாலும் அடிவாரத்திலிருந்து அறியவியலாது. அத்தகைய அமைப்பில் மலையின் உச்சித்தளம் முற்றமாக அமைந்துளது. காவல் பள்ளிக்குக் கிழக்கு மலையின் செங்குத்தான புறமாகும்.

தமிழகக் கடலில் சமணருடைய வாழ்க்கைக் கலம் அரசியல் என்னும் சூறாவளியால் அடிக்கடி அல்லற்படுவதென்பது இயற்கையாகவே அமைந்திருந்ததால், எவரும் எளிதில் அறியவியலாத இப்பகுதியில் அவர்கள் இருந்து இடையூறுகளை உடனுக்குடன் அறிந்து வாழ்விற்கு வழிகோலியிருக்கலாம். இன்று அங்கு நிற்கும் பாறைக்கு உயிரூட்டப் பெறுமானால் இவ்வுண்மையை அக்கல்லும் சொல்லும்.

நாவல் சுனை அல்லது இலிங்கச் சுனை:

காவல் பள்ளியினின்றும் மலையின் மேற்றளம் கிழக்குப் புறமாகக் கீழ்நோக்கிச் சரிந்து செல்லுகிறது. இச் சரிவுப்

பாதையில் ஆங்காங்கு உருண்டு நிற்கும் பாறைகளின் அமைப்பில் ஓரழகிருப்பதை நேரிற் காணின் புலனும். இவ்வாறுன் பகுதியில் நூற்றைம்பதடி அளவு இறங்கிய பின்னர், கரடிக் குகையின் மேல் வாயில் அமைந்துள்ள பள்ளத்தாக்கினை ஒத்த அமைப்புடைய இடத்தை அடையலாம். இங்கு சிறு மரங்களும் புதர்களும் வளர்ந்துள்ளன. இக் குறுகிய பகுதியினின்றும் மறுபடியும் தளம் உயர்ந்து செல்லுகிறது. இவ்வியற்கை அமைப்பு மலையின் மேல் நிலையில் கிழக்குப் பகுதியிலேயே அமைந்துளது. இங்கிருந்து மேலே தொடர்ந்து செல்லுவோமானல் மலையின் வடக்கு உச்சியை அடையலாம். இங்கு மலையின் மேற்பகுதி உயர்ந்து பரந்த வடிவில் கிழக்குப் புறம் சரிந்து அமைந்துள்ளது. சரிவின் செறிவில் நெடிதாகப் பிளவுபட்டுக் காணப்படும் பெரும் பாறைகளினிடையே தெற்கு வடக்காக நீண்டுள்ள குழிவான பிளவுத் தடமொன்று நீர்நிறைந்து காணப்படுகின்றது. கரையைச் சூழ்ந்து ஆங்காங்கு சிறுபுதர்கள். தென்கோடியிலொன்றும், வடிகோடியிலொன்றும், இடையே கீழ்க்கரையாக அமைந்துள்ள பாறையின் இடுக்கிலிருந்து ஒன்றுமாக வளர்ந்துள்ள மூன்று பெரிய நாவல் மரங்கள் செழித்தோங்கி நிற்கின்றன. நாவல் மரங்கள் சூழ இந்நீர் நிலையான சுனை காணப்படுவதால் இதனை 'நாவல் சுனை' என்று மக்கள் நவிலா நிற்பர். இச் சுனை ஏறத்தாழ எண்பதடி நீளமும், இருபதடி அகலமும் மிகுந்த ஆழமும் கொண்டுள்ளது.



இலிங்கச் சுனை

இச்சுனையில் நிறைந்துள்ள நீர் மழைநீரேயாம். கி பி. 1911-ஆம் ஆண்டில், அருகாமையிலுள்ள சிற்றூர்களில் வாழும் மக்கள் முயன்று அதிலுள்ள நீரை இறைத்தபொழுது, அதனடியில் முப்பத்தைந்தடிகட்குக் கீழாக முட்டை வடிவில் குடையப்பட்ட குகைக் கோயிலொன்று இருந்ததைக் கண்டார்கள். குடைவரையின் நடுவில்சிவலிங்கம் அமைக்கப்பட்டிருந்ததாம். இலிங்கம் பல்லாண்டுகளாக நீரில் படிந்திருந்தும் பாசி பிடியாது தூய்மையோடு

விளங்கியதாம். இறைவனை வலம்வரப் போதுமான திருச் சுற்றிடமும் அமைக்கப்பட்டுள்ளதாம். இலிங்கத்தோடு விளங்கும் இக்குகைக் கோயில், கடலுள் ஆழ்ந்து கிடக்கும் மணியென மலைமீதுள்ள பெருங் குழியினடியில் அமைக்கப்பட்டிருப்பினும் இன்று மழை நீரால் அக்குழி மூழ்க்கப்பட்டுப் பெருஞ் சுனையாகக் காட்சி தருகின்றது. எனவேதான், உண்மைச் சுவட்டையும் பொய்த் தோற்றத்தையும் சேர்த்து 'இலிங்கச் சுனை' என்றும் மக்கள் அழைப்பாராயினர்.

நாட்டில் மழைகுன்றிய காலங்களில் இச்சுனை நீரை மக்கள் இறைத்து, அடியில் குகைக் கோயிலில் உள்ள சிவலிங்கத்தை வழிபடுவார்களாம். அவ்வாறு நிகழ்த்திய மறுநாளே பெருமழை பொழிந்து நாட்டில் வளம் பெருகச் செய்வதோடு, குகைக் கோயிலும் மழைநீரால் மறைந்து சுனையாகக் காட்சி தருகிறதாம். (புதுக்கோட்டை சீமை வரலாறு)

இச்சுனையினடியில் அமர்ந்துள்ள தெய்வத்தை வழிவழியாக வழிபடும் மக்களும் சிற்றண்ணல் வாயில் மலையைச் சூழ்ந்துள்ள சிற்றூர்களில் இருக்கின்றூர்கள். அவர்கள் தங்கள் நலனுக்காக வேண்டுதலை செய்துகொண்ட காணிக்கைப் பொருள்களாகிய நாணயங்களையும் பிற பொருள்களையும் சுனையிலிட்டு சுனைக் கரையில் பொங்கலிட்டு நறுமணத் தூபத்துடன் சுற்றம் சூழ வழிபடும் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. (யான், 1956-ல் இங்கு அவர்கள் பொங்கலிட்டுப் பூசனை புரிந்ததை நேரிற் கண்டேன்)

நிகழ்ச்சிகள் எப்படிக்கிடைப்பினும், கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தைக் கருத்தாலும் இலக்கியத்தாலும் எவ்வாறு காணத்தக்கதோ அதைப்போல, இச்சுனையைப் பற்றி மக்கள் வழிவழி கூறும் செய்தியாலும், சிலர் வழிபாடு செய்துவரும் நிகழ்ச்சியாலும், அது அமைந்துள்ள இடத்தாலும், அதற்குள்ள பெயராலும், நீரினுள்ளே சிவனுக்குரிய குகைக் கோயில் அமைக்ககபட்டுள்ள உண்மை தெளிவாம்.

இஃது, எக்காலத்தில் யாரால் ஏற்பட்டது என்பதை உணர, குகைக்கோயிற் பகுதியிலோ அன்றி அதைச்சார்ந்த குழிவுப் பாறையிலோ கல்வெட்டுகள் இருக்கலாம், மற்றும் வரலாற்றை அறிவித்தற்குரிய பழைய சின்னங்களும் இருத்தற் கூடும். வரலாறு சென்ற காலத்தின் பழமாகவும் வருங்காலத்திற்கு வித்தாகவும் அமைந்து இலங்குவதால், இச்சுனையின் எஞ்சிய வரலாற்றைப் புதை பொருள் கழகமோ, அன்றிக் காலமோ எடுத்துக் காட்டும் என்பது தெளிவு.

(தொடரும்)

தமிழ்ப் பண்பாடு *

ச. பாலசுந்தரம்

1. ஏந்துதமிழ் இனம்வாழச் செய்யுட் பாடி
இன்புசெய்து வீற்றிருக்கும் ஏற்றம் மிக்கீர்!
போந்துதமிழ்ச் சுவையருந்தும் புலமை சான்றீர்
பொதுமக்காள்! வணக்கம்இத் தமிழ்ச்சங் கத்தே
தீந்தமிழ்த்தேன் சிறிதளவுண் சிறுவன் சிந்தைச்
சிறுசிறகாற் பறந்துதமிழ்க் காவி னுள்ளே
தோய்ந்துமிகச் சிறப்பாக முதிர்ந்து நிற்கும்
தூயதமிழ்ப் பண்பாடாம் கனிகள் நாடி

2. எவையுமிதற் கொப்பிலையென் றினிமை மேவி
எழில்பழுத்து விளங்குமருங் கனிக ளைத்தாம்
அவையகத்துப் படைக்குமவா உற்றேன், ஆனால்
அணில்சிதைத்த நறுங்கனிகள், அழுகிக் கெட்டுச்
சுவையிழந்த பழங்களொடு வெம்பல், வண்டு
துளைத்திருக்கும் பழங்களும்அங் கிருக்கும், நீவிர்
நவைதெரிந்திங் கருந்திமகிழ் கொள்ளல் வேண்டும்
நறுந்தமிழர்க் கிதுவுமொரு பண்பா டென்பார்.

3. வேர்பரவி விழுதிறங்கி விரிந்த டர்ந்து
விளங்குதமிழ்ப் பண்பெனுநல் லாலின் நீழல்
ஆர்வமுடன் பார்க்கஉமை அழைக்கின் றேனங்
கழகொழுகப் பழுத்திருங் கனிகள் அண்டி
ஏர்பெருக வீற்றிருக்கும் கிள்ளை இன்ப
இசைபாடும் நாகணவாய் எழிலார் சிட்டு
சோர்வகற்றும் தோகைமயில் ஆடல், தத்தம்
துணைமகிழும் புறவிவற்றைக் காண்பீர்; ஆனால்

4. நீடால மரப்பொந்தில் தலையை நீட்டி
நெளிகின்ற பாம்புபகல் விரும்பா ஆந்தை
கோடேறி விளையாடும் கடுவன் மந்தி
குறையாக வளர்ந்தசையும் விழுதுக்கூட்டம்
ஊடேறும் புல்லுருவி உரிந்த பட்டைக்
குள்ளிருக்கும் செந்தேள்கள் முசுட்டெ றும்பு
காடாக அடிமரத்தைச் சுற்றி நிற்கும்
கடும்புதரும் கண்டுள்ளம் சலிப்பீர்; மேலும்

---

* 6-2-60-ல் இலக்கியக் கழகச் சார்பில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த கவியரங்கிற் பாடப் பெற்றவை.

5. கருத்தூன்றிப் பார்ப்பீரேல் வேரைச் சுற்றிக்
கரையான்செய் புத்திருக்கக் காண்பீர், வேரை
நெருப்புக்கு வெட்டுகின்ற நெஞ்சில் லாதோர்
நெருங்கிவினை புரிவதையும் காண்பீர் இந்த
வருத்தமிகு காட்சியினால் வாடா தந்த
வாட்டந்தீர் வகைகேளீர்; மரத்தைக் காக்கும்
விருப்பின்றி வெயிற்கொதுங்கும் வெண்மை நீங்கி
வியன்றமிழ்நீர் விட்டதன்வேர், விழுது, காப்பீர்

6. வண்டமிழர் பண்பெனுஞ்சீர் வாவி காண
வருகவென அழைத்தேனங் கழகு நங்கை
தண்டையொலி பரவுகின்ற கரையில் தேமாந்
தண்ணிழல்சேர் மேடையதைச் சூழ்ந்து புற்கள்
மண்டிநிற்க மணம்வீசும் செடிகள் பூத்து
மலர்ந்திருக்க மரஞ்சுற்றிக் கொடிகள் ஆடக்
கெண்டையுணுஞ் சிச்சிலிகள் கிளர்ந்து பாடக்
கிழநாரை தவமியற்றக் காண்பீர்; மேலும்

7. சிறுகுறவை சிலபோது தலையை நீட்ட
சேற்கெண்டை கெழுத்தியுடன் திரியப், பூத்து
மறுவகன்ற தாமரைகள் முகத்தைக் காட்ட
மரையிலையில் வயிரங்கள் ஊச லாடும்
வெறிகமழும் நீர்ப்பூவின் வண்ணம் யாவும்
விரும்பிகரை மேலிருந்து காண்பீர்; ஆனல்
துறையருகே நாணல்வளர்ந் தோங்கி எங்கும்
துயர்நிறைக்கும் நீர்ப்பாம்பு தவளைக் கூட்டம்.

8. படிமுழுதும் நீர்ப்பாசி படிந்து செல்ல
அடிவைக்க முடியாத படிவ ழுக்கும்
நெடியேறுங் கொடிப்பாசி நீரின் நல்ல
நிலைகெடுத்து நிறம்மாற்றி வேட்கை யுற்றோர்
குடியாத படியாக்கிக் குளிப்ப தற்கும்
கூடாமற் குளமுழுதும் கொட்டைப் பாசி
கடிதாகநெருங் குமதைக் கலக்கி வீழும்
காரெருமை இவையாவும் கசந்து காண்பீர்.

9. குடநீரை நம்பியருங் குளத்தைப் பேணக்
கொடுமையினல் விளைந்ததிந்த குறைநற் சான்றோர்
கடமைஎனக் காட்டியநல் வாவி முற்றும்
கடும்பாசி மூடவிட்டோம் கயமை மேவி
நடமாடும் விலங்கியல்பை நச்சி நின்றோம்
நவைநீரை இறைத்துநிறை சேற்றை மாற்றி
இடர்தீர்க்கும் செந்தமிழ்நீர் பாய்ச்சி உண்ண
இனிதாக்கி நீராட எழுச்சி கொள்வோம்.

(தொடரும்)